My services are 100% FREE
வீடு வாடகைக்கு வாங்க மற்றும் விற்க அழையுங்கள்
Para Tisi
"Don't wait to buy real estate. Buy real estate and wait."
Call Para 647.299.0599

30 ஆவது ஆண்டில்
# விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
Tel: 416-282-8059
email: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvanakkam.com

துரித பணமாற்றுச் சேவை
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. E. Suite #3
(Eglinton & Markham)
Scarborough ON M1J 2H6
Tel: 416-267-8221

நதி: 30 | பாலம்: 17 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | SEPTEMBER 01, 2020

# பழமைவாதக் கட்சியின் புதிய தலைவராக எரின் ஒடுல்!

கனேடிய அரசியலில் பங்குகொள்ளும் மூன்று பிரதான கட்சிகளில் ஒன்றான பழமைவாதக் கட்சி தனது கட்சித் தலைவரை 2020 ஒகஸ்ற் 24இல் தெரிவு செய்தது.

57%ஆன புள்ளிகளைப் பெற்று ஒன்ராரியோ மாகாணத்தின் Durham தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கும் 47 வயது எரின் மைக்கல் ஓடுல் (Erin Michael O'Toole) கனேடியப் பழமைவாதக் கட்சியின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். இறுதிச் சுற்று வாக்கு எண்ணிக்கையில் இவருக்கு எதிராகப் போட்டியிட்ட ஸ்ரீபன் ஹாப்பரின் அமைச்சரவையில் பாதுகாப்பு அமைச்சரா கவும் பின்னர் நீதி அமைச்சராகவும் பதவிகளை வகித்த பீற்றர் மக்கே (Peter Mackay) 43%ஆன புள்ளிகளைப் பெற்றுத் தோல்வியுற்றார்.

பழமைவாதக் கட்சித் தலைவருக்கான தேர்தல் 2020 ஒகஸ்ற் 21 மாலை நிறை வேறியிருந்தும் வாக்குகளை எண்ணும் வேலை ஒகஸ்ற் 23 காலை ஆரம்ப மானது. அன்று மாலை 6 மணியளவில் முடிவு வெளியாகும் என எதிர்பார்க்கப் பட்டது. ஆனால் வாக்குகளை எண்ணும் இயந்திரம் தபால் மூலம் வந்த வாக்கு களைத் திறக்கும்போது வாக்குச்சீட்டுகளை வெட்டியதால் அவற்றை மீளவும் ஒட்டி சரிபார்த்து திரும்ப எண்ணுவதற்கு பல மணித்தியாலங்கள் எடுத்தன. அண்ணளவாக 4,000 வாக்குச்சீட்டுகள் வெட்டப்பட்டிருந்தன.

இதனால் தேர்தல் முடிவுகள் ஒகஸ்ற் 24 அதிகாலை ஒரு மணியளவில் தான் வெளிவந்தன. பழமைவாதக் கட்சியின் இம்முறை நடைபெற்ற தலைவர் தெரிவில் 174,404 பேர் வாக்களித்திருந்தனர். இதுவே கனேடியச் சரித்திரத்தில் ஒரு கட்சித் தலைவர் தெரிவுக்கு வாக்களித் தோரின் அதிகூடிய எண்ணிக்கையாகும். பழமைவாதக் கட்சியில் 270,000 பேர் கட்சித்தலைவர் தெரிவுக்கு வாக்களிக்கத் தகுதியுள்ளவராக இருந்தனர். இவர்களில் 65% ஆனோர் இம்முறை கட்சித்தலைவர் தெரிவுக்கு வாக்களித்திருந்தனர்.




பழமைவாதக் கட்சித் தலைவராக இருந்த அன்றூ சியர் (Andrew Scheer) 2019 டிசம்பரில் தனது கட்சித் தலைவர் பதவியைத் துறந்தார். பழமைவாதக் கட்சித் தலைவர் பதவிக்கு எரின் ஓடுல், பீற்றர் மக்கே, லெஸ்லின் லூயிஸ் மற்றும் டெரிக் சுலோன் என நால்வர் போட்டியிட்டனர். இவர்களில் லெஸ்லின் லூயிஸ் மட்டுமே பெண் வேட்பாளராவார். பழமைவாதக் கட்சி தலைவர் பதவிக்குப் போட்டியிட ஒருவர் $300,000 அனுமதிக் கட்டணம் செலுத்த வேண்டும். கனேடிய அரசியல் கட்சிகளில் அதன் தலைமைப் பதவிக்குப் போட்டியிட ஒருவர் செலுத்த வேண்டிய அதிகூடிய அனுமதிக் கட்டணம் இதுவாகும்.

நாட்டில் ஏற்பட்ட கோவிட்-19 தொற்று நோயால் பழமைவாதக் கட்சி அதன் உறுப்பினர்களை வாக்குகளைத் தபால் மூலம் சமர்பிக்குமாறு கேட்டிருந்தது. பழமை வாதக் கட்சி தலைவர் தெரிவுக்கு வாக்களிக்கும் கட்சி உறுப்பினர்கள் எல்லோரும் நான்கு வேட்பாளர்களுக்கும் தரவரிசையில் 1,2,3,4 என வாக்குச்சீட்டில் பதியலாம். இவ்வாறான இலகுவான வாக்களிக்கும் முறையாக இது இருந்தாலும் பதியப்பட்ட மொத்த வாக்குகளில் 20,413 வாக்குகள் செல்லுபடி யற்றனவாகின. அதாவது 11.7%ஆன வாக்குகள் செல்லுபடியற்றனவாகின.

ஒருவருக்கு விழுந்த மொத்த வாக்குகளின் எண்ணிக்கையில் மட்டும் பழமைவாதக் கட்சியின் தலைவர் தெரிவு செய்யும் முறை தங்கியிருக்கவில்லை. கனடா விலுள்ள 338 தொகுதிவாரியாகவே வாக்குகள் எண்ணப்படும். பின்னர் ஒரு தொகுதியில் விழுந்த மொத்த வாக்குகள் 100 எனக் கருத்தில் கொண்டு ஒவ்வொருவருக்கும் விழுந்த வாக்குகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப அவர்களுக்குப் புள்ளிகள் வழங்கப்படும். இவ்வாறே 338 தொகுதிகளுக்கும் நடைபெறும். இதனால் கட்சித் தலைவர் தெரிவில் ஒருவர் பெறக் கூடிய அதிககூடிய புள்ளிகள் 33,800 (338 x100) ஆகும். இப்புள்ளிகளில் குறைந்தது அரைவாசிக்கு மேல் ஒரு (1) புள்ளி கூடப் பெறுபவர் அதாவது

(தொடர்ச்சி 03ஆம் பக்கம்...)

Your Real Estate Investment Consultant
Dedicated for your success
OPPORTUNITIES ARE WAITING...
CALL ME FOR A FREE CONSULTATION
BUY SELL INVEST
DIVAGARAN MANIKKAVASAGAR
416.888.7877

Lexus of Richmond Hill
குமார் ஜெகசோதி
Tel. 905.883.8812
Cell: 416.451.0565
Kumar Jegasothy
Sales Consultant
11552 Yonge Street
Richmond Hill, ON L4E 3N7
www.lexusrh.com

BUY & SELL REAL ESTATE..
Pat Pushpakanthan
Full Time Broker
416 894-1187
19 Years exp
Listing Deal!!
HALL OF FAME
Century 21
416-290 1200

Canada Trust
Supen Subramaniyam
(Manager, Residential Mortgage)
ADVICE WHEREVER WHENEVER
416-844-8692
888-809-9154

BUY & SELL THROUGH ME & SEE THE DIFFERENCE!
Kannan Nadarajah
416-889-1083
kannanhomes143@yahoo.com


DENTAL OFFICE
3351 Markham Road, Unit #129
Markham & Steeles
Tel: 416.609.2022
3150 Eglinton Ave East, Unit #5
Markham & Eglinton
Tel: 416.264.3232
Dr.Iru Vijayanathan
BDS, FAGD, MFDS RCPS(Glasg.)
Dental Surgeon
Dentistry for children, adults and seniors

உவகை
மணமக்கள் இணைப்பு
Uvakai
Marriage Broker
Valvai Zagara
647.885.6104
email: uvakai100@gmail.com

BUY & SELL THROUGH ME & SEE THE DIFFERENCE!
Sukumar Selvaratnam
Realtor
416.624.4803
suku07@hotmail.com
HOMELIFE

MORTGAGE
For all your Mortgage
We Deal with all banks
Any situations
NESAN 416-908-5656
Toll Free: 1-844-878-2721 Fax: 647-351-3099
mortgage@nesan.ca www.nesan.ca
1585 Markham Rd, Unit #407A, Toronto, M1B 2W1
SUBRA MORTGAGES INC.

வீடு வாடகைக்கு... வாங்க/ விற்க...
Rathiga Thillaivannan
Dir: 647.839.0079
rathiga24@hotmail.com




# பத்ரிநாத் – விஷ்ணுவின் திவ்ய தேசம்

பத்ரிநாத் கோயில் கடல் மட்டத்தில் இருந்து 3,133 மீற்றர் உயரத்தில் இமையமலைப் பிராந்தியத்தில் கார்வால் மலைப்பாதையில் அலக்நந்தா ஆற்றின் கரையில் அமைந்துள்ள விஷ்ணுவுக்கு அர்பணிக்கப்பட்ட 108 திவ்ய தேசங்களில் ஒன்றாகும். கோவிலுக்குக் கீழ்பகுதியில் அமைந்துள்ள மருத்துவகுணங்களைக் கொண்ட தப்த குண்டம் எனப்படும் இயற்கை வெப்ப நீரூற்றில் புனித நீராடுதல் மிகவும் முக்கியமானதாகும். பத்ரிநாத் கோயில் வளாகத்தில் லக்ஷ்மி-குபேரர், கணேஷ் மற்றும் நர்-நாராயண் கோவில்கள் உள்ளன. பத்ரி விஷால் சன்னதிக்குப் பின்னணியில் பனியால் மூடப்பட்ட கர்வாலின் ராணி என்று அழைக்கப்படும் நீல்கண்ட் சிகரத்தில் காலை கதிரவனின் ஒளிபட்டு தங்க நிறத்தில் மின்னுவது பத்ரிநாத் கோவிலுக்கு மேலும் சிறப்பூட்டுகின்றது. இந்த ஆலயம் மே முதல் ஒக்ரோபர் மாதம்வரை வழிபாட்டிற்காகத் திறந்திருக்கும்.

ஆலயம் மூன்று பகுதிகளாக அமைந்துள்ளது. அதாவது தங்க விதானத்தில் பத்மாசனத்தில் பத்ரிநாதரின் விக்ரகம் வைக்கப்பட்டுள்ள கருவறை, பூஜை காரியங்கள் நடைபெறும் வழிபாட்டு மண்டபம் மற்றும் பக்தர்கள் தரிசனத்துக்காகக் காத்து நிற்கும் சபா மண்டபம். பத்ரிநாதரை நாராயணனாகவும் மற்றும் பிரம்மாவாகவும் உருவகித்து வழிபடுகின்றனர். ஆயினும் பத்ரி என்ற பெயர் மகாவிஷ்ணுவையே குறிக்கும்.



ஸ்கந்த புராணத்தின்படி எட்டாம் நூற்றாண்டில், ஷாலிகிராம் கல்லினால் செய்யப்பட்ட பத்ரிநாராயணரின் சிலை அலக்நந்தா நதியில் இருந்து கேரளாவைச் சார்ந்த ஆதி சங்கராச்சாரியரால் மீட்கப்பட்டு தப்த குண்டத்துக்கு அருகில் உள்ள ஒரு குகையில் வைத்து பிரதிஷ்டை செய்யப்பட்டுப் பின்னர் பத்தரிநாத் ஒரு பக்தி தலமாக மாற்றப்பட்டது. இதன் காரணமாக இன்றும் இந்த கோவிலின் தலைமை பூசாரி கேரளாவைச் சேர்ந்த பாரம்பரிய நம்பூதிரி பிராமண வகுப்பில் இருந்து நியமிக்கப்படுகின்றார். பதினாறாம் நூற்றாண்டில் கர்வால் மன்னரால் பத்ரிநாத் கோயில் புனரமைக்கப்பட்டு பத்ரி நாராயணரின் சிலையை தற்போதைய கோவிலுக்கு மாற்றப்பட்டது.

பத்ரி விஷாலை தரிசித்துவிட்டு பத்ரிநாத்தில் இருந்து 5 கிமீ தொலைவுக்கு உட்பட்ட பகுதிகளில் காணவேண்டிய முக்கியமான இடங்கள் யாதெனில் (1) சரஸ்வதி நதி உருவாகும் இடம் (2) சரஸ்வதி ஆற்றின் கரையில் அமைந்துள்ள சரஸ்வதி ஆலயம் (3) கேசவ் பிராயக் - சரஸ்வதி நதியும் அலக்நந்தா நதியும் சங்கமம்மாகும் இடம் (4) ஸ்வர்க்க ரோஹினி - பஞ்சபாண்டவ சகோதரர்கள் திரௌபதியுடன் பரலோகம் சென்ற பாதை (5) பீம்மன் பாலம் - சரஸ்வதி நதியைக் கடந்து பரலோகம் செல்வதற்காக ஒரே கல்லை வைத்து பீமனால் உருவாக்கப்பட்ட பாலம் (6) மானஸரோவர் நீரூற்று - திரௌபதியில் தாகம் தீர்க்க அர்ச்சுனன் தனது அம்பினால் உருவாக்கபட்ட நீரூற்று (7) பழங்கால குகையில் உயிருடன் உள்ள முனிவரின் தரிசனம் (8) வியாஸர் மற்றும் கணேஷ் குகைகள் - இங்கு இருந்து வியாஸர் முனிவர் விநாயகரின் உதவியுடன் மகாபாரத காவியத்தை இயற்றியதாக நம்பப்படுகிறது (9) இமையமலையில் சரஸ்வதி நதிக்கரையில் இந்திய-திபெத்-சீனா சர்வதேச எல்லையில் அமைந்துள்ள இந்தியாவின் கடைசி கிராமம் மானா (10) பிரம்மா கபால் - அலக்நந்தா ஆற்றின் கரையில் அமைந்துள்ள இந்த இடத்தில் இறந்து போன மூதாதையர்கள் மற்றும் உறவினர்களின் ஆத்மா மோட்சம் சென்றடையப் பூஜைகள் செய்கின்றனர்.

பத்ரிநாத்தில் இருந்து 45கிமீ தொலைவில் ஜோஷிமட் என்னும் இடத்தில் விஷ்ணுவின் நான்காவது அவதாரமான நரசிம்மருக்கு அர்பணிக்கப்பட்ட கோவில் உள்ளது. இந்தக் கோவில் கருவறையில் அரை சிங்கம் மற்றும் அரை மனிதன் வடிவத்தில் ஷாலிகிராம் கல்லினால் உருவாக்கப்பட்ட நரசிம்ம கடவுளின் சிலை உள்ளது. இந்த ஆலயமும் ஸ்ரீ சங்கராச்சாரியாரால் எட்டாம் நூற்றாண்டில் நிறுவப்பட்டதாக நம்பப்படுகின்றது. இந்தக் கோயில் 108 திவ்ய தேசங்களில் ஒன்றாகவும் கருதப்படுகின்றது. சமீபத்தில் இந்த ஆலயம் மிகவும் பிரமாண்டமான வடிவில் பழைய கோவிலுக்கு அருகில் புதியதாக கட்டப்பட்டுள்ளது. குளிர்காலங்களில் பிரதான பத்ரிநாத் கோயில் மூடப்படும் போது பத்ரிநாதரின் விக்ரகம் இங்கு வைத்து வழிபாடு செய்யப்படும்.

பத்ரிநாத்தையும் அதன் அருகிலுள்ள இடங்களையும் சுற்றிப்பார்ப்பதற்கு ஒரு நாள் போதுமானது. இருப்பினும் டெல்லியில் இருந்து பத்ரிநாத் மற்றும் சிவதலமான கேதார்நாத்தையும் அதனை சார்ந்துள்ள ஆலயங்களை ஹரித்வார்-

(தொடர்ச்சி 07ஆம் பக்கம்...)



செல்வராஜ், டெல்லி
www.tamilcartrip.com
WhatsApp: +91.986.816.5715





# பழமைவாத...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

குறைந்தது 16,901 புள்ளிகள் பெறுபவரே வெற்றி பெற்றவராகக் கொள்ளப்படும்.



இம்முறை 4 பேர் கட்சித் தலைவர் பதவிக்குப் போட்டியிட்டதால் முதல் கட்ட வாக்குகள் எண்ணும்போது ஒருவர் அரைவாசிக்குக் கூடிய புள்ளிகள் பெறுவது கடினம் என எதிர்பார்க்கப்பட்டது. அவ்வாறே முதல் கட்ட வாக்குகள் எண்ணும்போது அதாவது வாக்குகளின் முதல் தெரிவுகள் மட்டும் எண்ணும்போது நான்கு வேட்பாளர்களும் பெற்ற புள்ளிகள் பின்வருமாறு:

**அட்டவணை – 1**

**முதல் கட்ட வாக்கு எண்ணிக்கை**

| வேட்பாளர் | பெற்ற புள்ளிகள் |
|---|---|
| பீற்றர் மக்கே | 11,328.55 |
| எரின் ஓடூல் | 10,681.40 |
| லெஸ்லின் லூயிஸ் | 6,925.38 |
| டெரிக் சுலோன் | 4,864.67 |
| மொத்தம் | 33,800 |

இந்த முதலாம் கட்ட எண்ணிக்கையில் ஒருவர்கூட 16,901 புள்ளிகள் பெறாத படியால் ஆகக் குறைந்த புள்ளிகள் பெற்ற டெரிக் சுலோன் நீக்கப்பட்டு அவருக்கு விழுந்த வாக்குகளில் உள்ள இரண்டாவது தெரிவு வேட்பாளருக்கு அந்த வாக்குகள் வழங்கப்பட்டன. பின்னர் திரும்பவும் தொகுதிவாரியாக அந்த வாக்குகள் எண்ணப்பட்டுப் புள்ளிகள் வழங்கப்பட்டன. அப்போது மீதமாக இருந்த மூன்று வேட்பாளர்களும் பெற்ற புள்ளிகள் பின்வருமாறு:

**அட்டவணை – 2**

**இரண்டாம் கட்ட வாக்கு எண்ணிக்கை**

| வேட்பாளர் | பெற்ற புள்ளிகள் |
|---|---|
| எரின் ஓடூல் | 11,903.69 |
| பீற்றர் மக்கே | 11,756.01 |
| லெஸ்லின் லூயிஸ் | 10,140.30 |
| மொத்தம் | 33,800 |

இந்த இரண்டாம் கட்ட எண்ணிக்கையிலும் ஒருவர்கூட 16,901 புள்ளிகள் பெறாத படியால் ஆகக் குறைந்த புள்ளிகள் பெற்ற லெஸ்லின் லூயிஸ் நீக்கப்பட்டு அவருக்கு விழுந்த வாக்குகளில் உள்ள இரண்டாவது மற்றும் மூன்றாவது வேட்பாளர்களுக்கு அந்த வாக்குகள் வழங்கப்பட்டன. பின்னர் தொகுதி வாரியாகத் திரும்பவும் அந்த வாக்குகள் எண்ணப்பட்டுப் புள்ளிகள் வழங்கப்பட்டன. அப்போது மீதமாக இருந்த இரண்டு வேட்பாளர்களும் பெற்ற புள்ளிகள் பின்வருமாறு

**அட்டவணை – 3**

**மூன்றாம் கட்ட வாக்கு எண்ணிக்கை**

| வேட்பாளர் | பெற்ற புள்ளிகள் |
|---|---|
| எரின் ஓடூல் | 19,271.74 |
| பீற்றர் மக்கே | 14,528.26 |
| மொத்தம் | 33,800 |

இந்த மூன்றாம் கட்ட எண்ணிக்கையில் எரின் ஓடூல் 16,901இற்கு மேற்பட்ட புள்ளிகளை அதாவது 19,271.74 புள்ளிகள் பெற்றுக்கட்சித் தலைவராகத் தெரிவானார். இவ்வாறு கட்சித் தலைவரைத் தெரிவு செய்யும் முறையில் நாட்டிலுள்ள 338 தொகுதிகளுக்கும் சரிசமமான உரிமை (100 புள்ளிகள்) வழங்கப்படுவதால் ஒரு கட்சித் தலைவர் தெரிவுக்கு இது ஒரு மிகச்சிறந்த ஜனநாயக முறையாகும்.

பழமைவாதக் கட்சித் தலைமை பதவிக்கு போட்டியிட்ட நால்வரில் பீட்டர் மக்கே மிதவாத, பழமைவாதக் கொள்கை உடையவராகக் கருதப்பட்டவர். அதே போல் லெஸ்லின் லூயிஸ் மற்றும் டெரிக் சுலோன் ஆகிய இருவரும் தீவிர பழமை வாதக் கொள்கை உடையோராகக் கருதப்பட்டனர். நடுநிலை பழமைவாதக் கொள்கையுடைய எரின் ஓடூல் தான் இறுதியில் பழமைவாதக் கட்சியின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். ஆனால் அவரின் தலைவர் தெரிவுக்கு லெஸ்லின் லூயிஸ் மற்றும் டெரிக் சுலோன் ஆகியோரை ஆதரித்த தீவிர பழமைவாதக் கொள்கையுடையவர்களது இரண்டாவது மற்றும் மூன்றாவது விருப்பமே காரணமாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

மொன்றியலில் John O'Toole இற்கும் Molly Hall இற்கும் மகனாக 1973 ஜனவரி 22இல் Erin Michael O'Toole பிறந்தார். பின்னர் இவர் குடும்பத்துடன் ஒன்றாரியோவில் உள்ள Bowmanville நகரிற்கு தந்தையாரின் வேலை நிமித்தம் குடிபெயர்ந்தார். இங்கு தனது பாடசாலைக் கல்வியை மேற்கொண்ட எரின், கிங்ஸ்ரனிலுள்ள Royal Military Collegeஇல் தனது பட்டப்படிப்பை மேற் கொண்டார். 1995இல் கனேடிய விமானப் படையில் சேர்ந்து பணியாற்றினார். பின்னர் Dalhousie பல்கலைக்கழகத்தில் சட்டத்துறையில் பட்டம் பெற்றார்.

2012ஆம் ஆண்டில் Durham தொகுதியில் இருந்து நாடாளுமன்ற உறுப்பினராகப் பழமைவாதக் கட்சியின் சார்பில் தெரிவானார். 2015இல் ஸ்ரீபன் ஹாப்பரின் பழமைவாதக் கட்சியின் அமைச்சரவையில் எரின் ஓடூல் ஓய்வுபெற்ற படைவீரர்களது விவகாரங்களைக் கவனிக்கும் அமைச்சராகப் (Veterans Affairs) பதவி வகித்தார். 2017இல் நடைபெற்ற பழமைவாதக் கட்சியின் தலைவர் பதவிக்காகப் போட்டியிட்ட எரின், அன்றூ சியரிடம் தோல்வியடைந்து மூன்றாம் இடத்துக்கு வந்தார்.

(தொடர்ச்சி 07ஆம் பக்கம்...)

# நாமும் நமது இல்லமும் 565

# ஆதன வியாபாரமும் அதன் எதிர்காலமும்



ராஜா மகேந்திரன், P.Eng.
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969

ஆதன வியாபாரம் ஒரு கேள்விக் குறியாகக் காலம் நகர்கிறது. இந்நிலைமை நிலையானதா அல்லது நிலையற்றதா? ஆய்வாளர்கள் சரியாகத் தான் தகவல்களை வெளியிடுகின்றனரா? மிகக் குறைந்த வட்டி வீதத்தில் அடமானக்கடன் ஒரு வரமாகலாம். தொழில் இழப்பது, நிறுவனங்கள் தமது கதவுகளைப் பூட்டுவது ஒரு சாபமாகலாம். வரமா சாபமா இன்றைய நிலைமை?

மிகக் குறைந்த வட்டி வீதம் ஆதன விலையை அதிகரிக்கவே செய்கிறது. இதனால் ஆதனம் வைத்திருப்போரின் நிகர பெறுமதி (Net worth) அதிகரித்தே செல்கின்றது. ஆனால் வாடகைக்கு இருப்போரின் நிலைமை? தொழில் இழப்போர் அரசின் கொடுப்பனவில் தங்கியிருக்க வேண்டிய நிலைமை. வாடகைக்கு இருப்போருக்கு வட்டிவீதக் குறைப்பு எதுவித பலனையும் கொடுக்காது. அத்துடன் ஆதனம் வாங்குவதற்குரிய நிலைமையை கடினமாக்குகிறது.

கோவிட்-19 இன் பாதிப்பு மார்ச் 2020இல் ஏற்பட்டபோது அன்றைய மத்திய வங்கியின் ஆளுநர் ஸ்ரீவன் பொலோஸ் கனேடிய மத்திய வங்கியின் வட்டி வீதத்தை 0.25%ஆக குறைத்தார். இதன் தொடர்ச்சியாக நிதி நிறுவனங்கள் முதன்மை வட்டி வீதத்தையும் அடமானக் கடனின் வட்டி வீதத்தையும் குறைத்தன. ஐந்து (5) வருடத்துக்குரிய மாறாத வட்டி வீதம் (5 years closed mortgage rate) 2% இற்குக் குறைவாக கொண்டு வரப்பட்டுள்ளது.

இதனால் ஏற்கனவே மாறும் அடமானக் கடன் (Variable Mortgage Rateஇல்) அடமானக் கடன் கொண்டுள்ளோரின் கடனின் பெறுமதி அதிகமாகக் குறையத் தொடங்கியது. அனேகமானோர் ஏற்கனவே இருந்த அடமானக் கடனை மீளாய்விற்கு உட்படுத்தினர். அதிகமான அடமானக் கடன்கள் மீளாய்விற்கு உட்படுத்தப் பட்டுள்ளது. இந்நிலைமை ஆதன உரிமையாளர்களுக்கு ஒரு வரமே. குறிப்பாக கடந்த பத்து (10) வருடங்களில் ஆதன உரிமையாளர்களின் நிகர பெறுமதி அதிகரித்தே உள்ளது.

கோவிட்-19இன் பாதிப்பால் ஏப்ரல் 2020 இல் ஆதன வியாபாரம் முற்றாக ஸ்தம்பிதம் அடைந்த போதிலும் தொடர்ந்து வந்த மாதங்களில் ஆதன வியாபாரம் அதிகரிக்கத் தொடங்கியது.

குறிப்பாக ஜூலை 2020இல் ஆதன வியாபாரத்தில் பலவித சாதனைகள் ஏற்படுத்தப்பட்டன. ரொறொன்ரோ பெரும் பாகம் தவிர்த்து ஒன்ராரியோவின் மற்றைய பகுதிகளிலும் விலை அதிகரிப்பைக் காணக்கூடியதாக உள்ளது. உதாரணமாக Barrie, Hamilton, Burlington பகுதிகளிலும் ஆதனங்களின் விலையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

அட்டவணை - 1

| $500,000 அடமானக் கடன் 30 வருட திருப்பிச் செலுத்தும் காலம் | | | |
|---|---|---|---|
| வட்டி வீதம் | மாதாந்த கொடுப்பனவு | | |
| | முதல் | வட்டி | மொத்தம் |
| 2.99% | $860 | $1240 | $2100 |
| 1.99% | $825 | $1020 | $1845 |

அடமானக் கடன் 2.99% வட்டி வீதமாகவுள்ள போது ஒருவர் செலுத்திய $2,100இனைத் தொடர்ந்து வட்டி வீதம் 1.99%இற்குக் குறைவாக இருக்கும் போதும் செலுத்துவாரானால், அவர் மேலதிகமாகச் செலுத்தும் மாதாந்தக் கட்டணம் $255 ($2,100-$1,845) அத்துடன் மாதாந்தம் செலுத்தும் அடமானக் கடனின் செலுத்தப்படும் முதலிற்கான தொகை $825 ஆகியவை மாதாந்தம் $1,080 ($255+$825). அதாவது அண்ணளவாக வருடாந்தம் $13,000 முதலை நோக்கிச் செல்வதைக் காணலாம். இது ஒரு சிறந்த சேமிப்பாகும்.

வெளிநாட்டவர்களின் வருகை தற்காலிக மாக நிறுத்தப்பட்டாலும் (அமெரிக்க எல்லை மூடப்பட்டதாலும்) குறிப்பாக ரொறொன்ரோ மத்திய பகுதியில் வாடகை ஏறக்குறைய 6% வீதத்தினால் குறைந்துள்ளது. எனினும் வாடகை குறைந்ததால் உரிமையாளர்களுக்கு இது வரை பெரிய பாதிப்பு ஏற்படவில்லை.

பெப்ரவரியிலிருந்து ஜூலை 2020 வரையிலான காலத்தில் மணித்தியாலத் திற்கு $20 இற்கு (வருட வருமானம் $40,000) குறைவாக வருமானம் பெற்றவர் களில் 76% ஆனோர் வேலையை இழந்துள்ளனர். இதற்கு நேர்மாறாக இக்காலப்பகுதியில் மணித்தி யாலத்திற்கு $30 இற்கு (வருட வருமானம் $60,000) மேலாக வருமானம் பெறுவோரின் வேலை வாய்ப்பு அதிகரித்து இருப்பதாகவும் தெரியவருகிறது.

இந்நிலையில் Canada Mortgage and Housing Corporation (CMHC)இன் எதிர்வு

(தொடர்ச்சி 07ஆம் பக்கம்...)




ரொறன்ரோ நகரசபை உறுப்பினர்
போல் ஐன்ஸ்லி
வட்டாரம் 24, ஸ்காபரோ - கில்வூட்
TORONTO

உதவி தயாராக உள்ளது
தொகுதியில் வாழ்வோருக்கான ரொறன்ரோ நகரசபை சம்பந்தப்பட்ட அனைத்து பிரச்சனைகளுக்கும் தீர்வுகாண்பது எமது சேவை

- வசதிக்கேற்ற விலையில் வீடுகள்
- வளர்ப்பு பிராணிகள் மற்றும் விலங்குகளுக்கான சேவை
- அடுக்கு மாடிகளுக்கான தரநிலை • நூலகம்
- கட்டிட அனுமதிப்பத்திரம் • குப்பை அகற்றல்
- குழந்தை பராமரிப்புக்கான மானியம் • நகரசபைத் தேர்தல்
- அவசரகால வதிவிட வசதிகள் • தீயணைப்பு சேவை
- நகராட்சி உரிமம் மற்றும் தரநிலைகள்

எனது சமூக தொடர்பு சாதனங்களும், வலையத் தளமும் தினமும் பதிவேற்றம் செய்யப்படுவதால், தகவல்களை உடனுக்குடன் பெற்றுக்கொள்ள பின்வரும் தகவல் சாதனங்களைப் பாவிக்கவும்.

Twitter: @Ainslie_Ward24 Instagram: @cllrainslie
Facebook: @ward24scarboroughguildwood

- "ஒன்ராறியோ வேலைகள்" நிறுவனத்தின் சேவைகள்
- வாகனத்தரிப்பிடம்
- சோலைகள் • பொதுப் போக்குவரத்து
- நகர்காவலர் சேவை • மரங்கள்
- பொதுச் சுகாதார சேவை • குடிநீர்
- தெருக்கள் • ஆதன வரி
- மீள்சுழற்சி மற்றும் உணவுக்கழிவு பசுமைத் தொட்டி

பொது சுகாதார சேவை அலுவலகத்தின் தகவல் தொலைபேசி இலக்கமும் 311 என்ற இலக்கமும் அதி கூடிய அழைப்புக்களை ஏற்றுக்கொள்வதால், ரொறொன்ரோ மாநகரசபையின் www.toronto.ca/covid19 என்ற வலையத் தளத்தில் 53 மொழிகளில் உங்களுக்கு வேண்டிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

CONSTITUENCY OFFICE
Scarborough Civic Centre
150 Borough Drive, 2nd Floor
Scarborough, ON M1P 4N7
Phone: 416-396-7222
Fax: 416-392-4006

TORONTO CITY HALL OFFICE
100 Queen Street West.
2nd Floor - Suite C52
Toronto, ON M5H 2N2
Phone: 416-392-4008
Fax: 416-392-4006

councillor_ainslie@toronto.ca
Ward 24 Scarborough-Guildwood
@cllrainslie
www.paulainslie.com
@Ainslie_Ward24
Paul Ainslie (City of Toronto)

www.paulainslie.com 416-396-7222

# வடமாகாண இடைநிலைப் பிரிவு மாணவர்களின் கல்வி நிலையை மேம்படுத்துதல்

ந. அனந்தராஜ், B.A.(Hons.) - M.A
Dip-In-Edu.,Dip-In-Journalism, SLPS, SLEAS

## பகுதி–6

2019ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த. சாதாரண தர பரீட்சைப் பெறுபேறுகளில், வடமாகாணத்தில் பிரதான பாடங்கள் ரீதியாக, வலய மட்டங்களின் அடைவு மட்டம் தொடர்பான தரவுகள் தெளிவான ஒரு செய்தியை வெளிப்படுத்துகின்றன. இங்கு குறிப்பிடப்படும் விடயங்களும் ஆலோசனைகளும் ஒவ்வொரு அதிபர்களையும், ஆசிரியர்களையும் சிந்திக்கச் செய்து செயலாற்ற வைக்க வேண்டும்.

ஆசிரியர்களில் மறைந்திருக்கும் ஆற்றல்களைத் தட்டி எழுப்புவதற்காகவே பல விடயங்கள் சுட்டிக் காட்டப்படுகின்றன. இந்த விடயத்தில் எனக்கு நிறைந்த அனுபவமும், கற்பித்தல் மற்றும் நிர்வாக ஆற்றலும் உள்ளன என்ற நிலையில் சிலவற்றை மனம் திறந்து வெளிப்படுத்தியுள்ளேன். ஏனெனில் நான் ஓர் ஆசிரியராகவும், முதலாம் தர அதிபராகவும், கல்வி நிர்வாக சேவை அலுவலராகவும் இருந்து பாடசாலைகளை வெற்றிகரமாக நடத்திச் சென்ற இடமெல்லாம் பெறுபேறுகளையும், ஒழுங்கு கட்டுப்பாடுகளையும் உயர்த்திய வகையில் சக கல்வியாளன் என்ற வகையில் உங்களுடன் உரிமையுடன் எனது கருத்துக்களைப் பகிர்ந்து கொள்கின்றேன்.

ஆசிரியர்களாகிய எங்களிடம் கற்கவரும் மாணவர்களைப் புடம்போட்டு எடுப்பதையே இலக்காகக் கொண்டிருக்க வேண்டும். கடந்த ஆண்டின் பரீட்சை முடிவுகள் எமக்கு நிறைந்த பாடத்தைப் புகட்டியுள்ளன. அடுத்துவரும் பரீட்சைக்கு எப்படியெல்லாம் மாணவர்களைத் தயார் செய்ய முடியும், எவ்வாறான தவறுகள் விடப்பட்டன என்ற பல்வேறு அனுபவத்தை யும் தந்துள்ளமையினால் நிச்சயமாக வடக்கு, கிழக்கு மாகாணம் முதல் மூன்று நிலைகளுக்குள் மீண்டும் உயர்த்தப்படும் என்ற நம்பிக்கையுடன் செயற்படுவோம்.

2019ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த. (சா/த) பரீட்சையில் பாடங்களினதும் பெறுபேற்றுப் பகுப்பாய்வுகள்:

இங்கு காட்டப்பட்ட அட்டவணை 03இன்படி பின்வரும் பல விடயங்கள் வெளிப்படுத்து கின்றன:

1. சைவநெறி பாடத்தில் தீவகம் 77.17 வீதமாக இருக்கும் பொழுது ஏனைய வலயங்கள் 80 வீதத்திற்கு மேல் கொண்டுள்ளன.

2. மாகாண நிலையில் 86.03 சித்தி வீதமும், தேசிய நிலையில் 85.49 வீதமும் அடையப்பட்டுள்ளது என்ற வகையில் சைவநெறி தேசிய மட்டத்தைவிட உயர்ந்த நிலையில் காணப்படுகின்றது. ரோமன் கத்தோலிக்கமும், தேசிய நிலையை விட உயர்வாகக் காணப்பட்ட போதிலும், கிறிஸ்தவம், இஸ்லாம் ஆகிய பாடங்களின் மாகாண நிலையிலான அடைவு மட்டம் தேசிய நிலையை விடத் தாழ்ந்த மட்டத்திலேயே காணப்படுகின்றன.

| வலயம் | சைவநெறி | கத்தோலிக்கம் | கிறிஸ்தவம் | இஸ்லாம் | தமிழ் | ஆங்கிலம் | கணிதம் | வரலாறு | விஞ்ஞானம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 91.17 | 92.48 | 85.42 | 50.00 | 89.77 | 61.83 | 74.82 | 81.89 | 63.11 |
| தீவகம் | 77.10 | 83.93 | 69.23 | 33.33 | 75.91 | 21.66 | 53.30 | 58.78 | 33.51 |
| கிளிநொச்சி | 81.66 | 89.86 | 64.74 | 83.33 | 84.61 | 33.38 | 63.43 | 69.39 | 47.85 |
| மடு | 88.13 | 99.03 | 71.43 | 81.48 | 94.25 | 22.25 | 63.07 | 74.50 | 35.59 |
| மன்னார் | 95.07 | 98.69 | 87.67 | 85.94 | 95.53 | 54.94 | 71.70 | 81.77 | 55.14 |
| முல்லைத்தீவு | 82.73 | 92.14 | 100 | 76.92 | 90.81 | 39.59 | 63.35 | 77.78 | 50.00 |
| தென்மராட்சி | 83.57 | 85.42 | 66.67 | | 84.78 | 47.00 | 68.48 | 68.63 | 55.82 |
| துணுக்காய் | 80.68 | 92.86 | 50.00 | | 85.71 | 25.10 | 60.12 | 71.02 | 38.78 |
| வடமராட்சி | 86.98 | 91.25 | 81.82 | | 89.93 | 54.97 | 73.43 | 74.00 | 57.42 |
| வலிகாமம் | 86.61 | 91.25 | 81.65 | | 86.77 | 42.28 | 66.00 | 68.55 | 45.15 |
| வவுனியா தெற்கு | 88.39 | 97.13 | 83.47 | 86.51 | 92.09 | 52.62 | 66.73 | 77.48 | 56.72 |
| வவுனியா வடக்கு | 84.77 | 93.62 | | | 85.36 | 33.05 | 62.13 | 68.83 | 37.87 |
| மாகாணநிலை | 86.03 | 93.56 | 78.57 | 84.09 | 88.43 | 46.01 | 67.55 | 74.19 | 51.89 |
| தேசிய நிலை | 85.49 | 92.61 | 86.28 | 82.64 | 87.05 | 62.36 | 71.08 | 83.51 | 65.45 |

ஆயினும் மன்னாரையும், யாழ்ப்பாணத்தை யும் தவிர்ந்த ஏனைய வலயங்களில் 20 வீதமான மாணவர்கள் சைவநெறியில் சித்தி பெறத் தவறியமை ஓர் ஆரோக்கியமான பெறுபேறாகக் கருத முடியாது. பெரும்பாலான பாடசாலைகளில் சைவநெறி பாடத்திற்கு முக்கியத்துவம் கொடுக்காது ஏனைய சில முக்கியமான பாடங்களில் கூடிய கவனம் செலுத்தப்படுவதாலேயே இந்தப் பின்னடைவு காணப் படுகின்றது. சைவ நெறி கற்பிக்கும் ஆசிரியர்கள் கூடிய அளவில் முயற்சி எடுத்தால் 95 வீதத்திற்கு மேலான பெறுபேற்று மட்டத்தை அடைந்து கொள்ளலாம்.

3. அதேபோன்று இஸ்லாம் பாடத்திலான பெறுபேறுகள் பகுப்பாய்வு செய்யப்படும் பொழுது, கிளிநொச்சி, மடு, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா தெற்கு ஆகிய வலயங்கள் தவிர்ந்த ஏனைய வலயங்களின் பெறுபேறு குறைவாகக் காணப்படுகின்றது. இப்பாடத்தின் பெறு பேற்றை உயர்த்துவதில் அந்தந்தப் பிரதேசங்களில் உள்ள பள்ளிவாசல் நிர்வாகமும், மௌலவிகளும் வார இறுதி வகுப்புகளை நடத்துவதன் மூலம் இஸ்லாம் பாட அடைவு மட்டத்தை உயர்த்தலாம். இந்த நடைமுறை பெரும் பாலான பள்ளிகளில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

4. தமிழ் மொழிப் பாடத்திலான பெறு பேற்றில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மடு, மன்னார், முல்லைத்தீவு, வடமராட்சி, வவுனியா தெற்கு ஆகிய வலயங்களே, மாகாண நிலை மற்றும் தேசிய நிலை யிலான பெறுபேற்று வீதத்தை அண்மித்த தாக உள்ளது. ஏனைய வலயங்களில் சராசரியாக 20 வீதமான மாணவர்கள் தமிழ் மொழியில் சித்திபெறத் தவறிய மையே வடமாகாணத்தின் கல்வி வளர்ச்சியிலான மந்த நிலைக்குக் காரணமாகும். தமிழ் மொழியில் கட்டுரை எழுதுதல், சுருக்கி எழுதுதல், இலக்கணங்கள், பாடலுக்குப் பொருள் கூறுதல் போன்றவற்றில் திரும்பத் திரும்பப் பயிற்சிகளை வழங்கி வருவதுடன், நூல்களை வாசிப்பது மற்றும் கையெழுத்துச் சஞ்சிகைகளை தனியாகவும், குழுவாகவும் தயாரிக்க ஆசிரியர்கள் வழிப்படுத்த வேண்டும். இதனால் மாணவர் களிடையே தேடலும், கற்பதிலான விருப்பமும் ஏற்படும். க.பொ.த. உயர்தரம் கற்பதற்கான கட்டாய பாடமாக தமிழ் இருப்பதால் தமிழ் மொழி கற்பிக்கும் ஆசிரியர்கள் இதில் கூடிய கவனம் எடுக்க வேண்டும்.

5. ஆங்கில மொழிப் பாடத்தில் யாழ்ப்பாணம், வடமராட்சி, வவுனியா தெற்கு ஆகிய வலயங்களே மாகாண நிலையிலான அடைவு மட்டத்திலும் உயர்வாகக் காணப்படுகின்றன. ஏனைய வலயங்களில் ஆங்கிலப் பாடத்திலான அடைவு மட்டம் தாழ்ந்த நிலையிலேயே காணப்படுகின்றது. இதற்கான காரணங் களாக கல்வி அதிகாரிகளால் சுட்டிக் காட்டப்பட்ட விடயங்கள் பின்வருமாறு:

5.1. ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர்களில் பலர் நியமன பாடம் என்ற வகையில் ஆங்கிலத்தை ஒரு கற்பிக்கும் பாடமாக எடுத்துக் கற்பிக்கின்றனரே ஒழிய அவர்களிடம் ஆங்கில அறிவு தாழ்ந்த மட்டத்திலேயே காணப்படுகின்றது.

5.2. பெரும்பாலான தொண்டர் ஆசிரியர்கள், ஏதோ ஒரு வகையில் பாடசாலைகளில் கற்பிக்க வேண்டுமென்பதற்காக ஆங்கிலத்தைக் கற்பித்துக் கொடுக்கத் தொடங்கியதால், நிரந்தர நியமனங்கள் வழங்கப்படும் பொழுது அவர்களின் விருப்பமில்லாமலேயே ஆங்கில ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட்டது. இதனால் அவர்கள் ஆங்கிலத்தைத் தமிழ் மொழியிலேயே கற்பிக்கும் துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

5.3. ஆங்கில ஆசிரியர்களாக நியமனம் செய்யப்பட்டோரில் பலர் தமது பாடத்தை மாற்றித் தருமாறு கல்வி அமைச்சில் கண்ணீருடன் அலைந்து திரிந்தமையை யும் கண்டிருக்கலாம்.


5.4. ஆங்கில ஆசிரியர்களாக நியமனம் செய்யப்பட்ட பின்னராவது தமது ஆங்கில மொழி அறிவை வளப்படுத்தும் வகையில் தேடலில் ஈடுபடுவதில்லை. அவர்களில் பலர் வெளிவாரிப் பட்டதாரிகளாகக் கலைத்துறைப் பாடங்களில் சித்தி பெற்று விட்டு அதனை ஒரு காரணமாக வைத்து தமது பாட வகுதியை மாற்றிக் கொண்டு செல்ல முயற்சிப்பதால் ஆங்கிலப் பாடத்திற்கான ஆசிரியர் வெற்றிடங்கள் தொடர்ந்தும் நிலவுகின்றது.



5.5. ஆங்கிலப் பாட சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்களால் வழங்கப்படு கின்ற பயிற்சிகள் வினைத்திறனுடைய தாகவும், கவர்ச்சிகரமானவையாகவும், ஆசிரியர்களின் வாண்மை விருத்தியை மேம்படுத்தும் வகையிலும் அமைந்திருக்கவில்லை.

5.6. பல்கலைக்கழகங்களிலும், ஆசிரியர் கலாசாலைகளிலும், கல்வியியல் கல்லூரி களிலும் ஆங்கில ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் பயிற்சிகள் வினைத் திறனுடைய தாக்கப்படுவதுடன், சர்வதேச தரத்திற்கு மாணவர்களைத் தயார்படுத்த லுக்கு அமைவாக வழங்கப்பட வேண்டும்.

(தொடர்ச்சி 07ஆம் பக்கம்...)

CEDARGREEN COIN LAUNDRY & DRY CLEAN DEPOT
" VERY CLEAN LAUNDRY" Avoid The Rush ..... Come during weekdays!

• Large laundry Folding Tables, Lots of Space • We offer wash, Dry & fold at .99Cents /lb
Commercial
. We Clean Commercial Linens, Aprons, & Towels • We Clean Uniforms Dry Clean or Wash & Dry
. We Clean Towels/Sheets from Daycare, Clinics, Hair Saloon, Nail Spa, Restaurants etc
STORE Tel: 416-289-7514
OPEN DAILY 8 am – 11 pm
Sat. & Sun 7 Am – 11 pm
(Near Bellamy & Lawrence – find us in GOOGLE !!) 3340 Lawrence Ave. East, Unit 5, Scarborough, ON M1H 1A7

# விக்னேஸ்வரன் தமிழ் இனவாதியா?




முன்னாள் வட மாகாண முதலமைச்சரும் தற்போது நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவாகியுள்ளவருமான சி.வி. விக்னேஸ்வரன் நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரை தொடர்பான சர்ச்சை தொடர்ந்து கொண்டே இருக்கின்றது.

இலங்கையின் 9ஆவது நாடாளுமன்றத்தின் முதலாவது கூட்டத் தொடரில் கலந்து கொண்டு உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் சம்பிரதாய ரீதியாக சபாநாயகரை வரவேற்கும் வகையிலேயே தங்கள் உரைகளை நிகழ்த்தினர். விக்னேஸ்வரனும் சபாநாயகரை வரவேற்று உரையாற்றும் போது. ‘உலகில் உயிர் வாழும் மூத்த மொழிகளில் ஒன்றும், இந்நாட்டின் முதல் சுதேச குடிமக்களின் மொழியுமான தமிழ் மொழியில் வாழ்த்துக்களை தெரிவிப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்” என்று குறிப்பிட்டார். இதுவே சர்ச்சையை ஏற்படுத்தி விட்டுள்ளது.

விக்னேஸ்வரனின் இந்தக் கருத்தை சஜித் அணியினரே கடுமையாக எதிர்த்தனர். இந்த உரையை நாடாளுமன்ற ‘ஹன்சார்ட்’இல் பதிவு செய்யக் கூடாது என்றும், அதனை ‘ஹன்சார்ட்’ இல் இருந்து நீக்க வேண்டும் என்றும் சஜித் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் மனுஷ்ய நாணயக்காரவே சபையில் ஒழுங்கு பிரச்சினை ஒன்றை கொண்டு வந்து சர்ச்சையை தொடக்கி வைத்தார்.

தொடர்ந்து நாடாளுமன்றத்திலும், பொது வெளியிலுமாக விக்னேஸ்வரனின் கருத்திற்கு எதிர்ப்புகள் வலுப்பெற்றன. விக்னேஸ்வரனின் குறித்த கருத்து இனவாதத்தின்பாற்பட்டது என்பதாகவே சிங்களத் தரப்பில் கருத்துக்கள் முன் வைக்கப்பட்டு வருகின்றன. “இவ்வாறு பேசியோரெல்லாம் அழிக்கப்பட்டு விட்டதை மனதிற்கொள்ள வேண்டும்” என்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா கூறியிருப்பதையும் இங்கு குறிப்பிட வேண்டும்.

இதேவேளை, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை சுதந்திரமாக வெளிப்படுத்தலாம் என்றும், எந்த நாடாளுமன்ற உறுப்பினருக்கும் அவர் அரசாங்க உறுப்பினராக இருந்தாலும் சரி எதிர்கட்சி உறுப்பினராக இருந்தாலும் சரி கருத்தினை வெளிப்படுத்துவதற்கான உரிமையும் சுதந்திரமும் உள்ளது எனவும் சபாநாயகர் குறிப்பிட்டுள்ளார். அதனால், விக்னேஸ்வரனின் உரை ‘ஹன்சார்ட்’இல் இருந்து நீக்கப்படவில்லை.

அடுத்து இடம்பெற்ற நாடாளுமன்ற அமர்வில் தான் இனவாத அடிப்படையில் தனது கருத்தைக் கூறவில்லை என்பதற்கான விளக்கத்தை விக்னேஸ்வரன் முன்வைத்து உரையாற்றினார். தனது இரு மகன்கள் சிங்களப் பெண்களையே திருமணம் முடித்துள்ள விடயத்தையும் அவர் அங்கு குறிப்பிட்டார்.

ஊடகம் ஒன்றில் இதுபற்றி கருத்துத் தெரிவிக்கையில் தமிழர் வந்தேறு குடிகள் என்று சிங்கள மக்கள் மத்தியில் கடும் போக்கு சிங்கள அரசியல்வாதிகளால் பரப்புரை மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் தான் தமிழ் மக்களின் பூர்வீகம் பற்றி நாடாளுமன்றில் பேச வேண்டிய கடமையும் தேவையும் இருந்தது என்று விக்னேஸ்வரன் தெரிவித்ததுள்ளார்.

கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை அண்மையில் தெரிவித்துள்ள கருத்தையும் இங்கு குறிப்பிட வேண்டும். “அன்று பிரித்தானிய ஆட்சிக் காலத்தில், துன்பங்களுக்கு உள்ளான எம் மக்களை அதிலிருந்து மீட்க அனைத்து மக்களும் இனம் கடந்து, மொழி கடந்து ஒன்றிணைந்து போராடினர். ஆனால், இன்று நாம் எந்த நிலைமையில் உள்ளோம்? யாருடைய மொழி உலகிலேயே பழைய மொழி என விவாதித்துக் கொண்டு, காலத்தையும் நேரத்தையும் வீணாக்கிக் கொண்டு வருகிறோம்.

நான் அரசாங்கத்திடம் ஒன்றை வலியுறுத்த விரும்புகிறேன். இனம் மற்றும் மொழியை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்துக் கட்சிகளையும் தடை செய்ய வேண்டும். இவர்களால், நாடு பிளவடைவதை விடுத்து வேறு எந்த நன்மையும் ஏற்படப் போவதில்லை” என அவர் கூறியிருக்கின்றார். இதில் விக்னேஸ்வரனின் கருத்து தொடர்பில் அவருக்குள்ள கோபம் வெளிப்படுகின்றது.

உண்மையில் ஒரு மொழியின் பெருமை பற்றி அந்த மொழியை தாய் மொழியாகக் கொண்ட ஒருவர் பேசுவதை இனவாதமாகவோ, மொழிவாதமாகவோ கருத முடியாது. ஆனால், எந்த சந்தர்ப்பத்தில் வைத்து எவ்வாறு பேச வேண்டும் என்பது கருத்திற்கொள்ளப்பட வேண்டும். ஒருவர் தாக்கும் போது திருப்பித் தாக்குவதே பொருத்தமானது என்பது நடுநிலையில் இருந்து சிந்திப்பவர்களின் கருத்து.



உண்மையில் விக்னேஸ்வரன் ஒரு தமிழ் இனவாதியல்ல. சிங்களவர்களுக்கு எதிரானவரும் அல்ல. தான் கொழும்பில் பிறந்து வளர்ந்து சிங்களவர்களோடு சேர்ந்து வாழ்ந்ததை அவரே பல சந்தர்ப்பங்களில் வெளிப்படுத்தியிருக்கின்றார்.

அதுமட்டுமன்றி தான் கொழும்பில் வாழ்ந்த காலத்தில் தமிழ் மக்களின் பிரச்சினைகளை சரியாகப் புரிந்துகொள்ளவில்லை எனவும், வடக்கின் முதலமைச்சராக வந்தபின் அந்த மக்களோடு நெருங்கிப் பழகும் போதுதான் அவர்களின் பிரச்சினையை புரிந்துகொண்டதாகவும் கூறுகின்றார். இது தமிழ் மக்களுக்கு அதிர்ச்சியளிக்கும் ஒன்றாக உள்ளது. விக்னேஸ்வரன் வடமாகாண முதலமைச்சராகப் பொறுப்பேற்று ஒன்றரை வருடத்தின் பின்னர் ஊடகம் ஒன்றிற்கு கருத்துத் தெரிவிக்கையில் இக்கருத்தைத் தெரிவித்திருந்தார்.

தான் முதலமைச்சராகப் பொறுப்பேற்று ஒன்றரை வருடங்களாக அம்மக்களுடன் உறவாடுகின்ற போதுதான் பிரச்சினைகளைப் புரிந்து கொண்டதாக அவர் கூறியிருந்தார். அதே கருத்தை அண்மையிலும் அவர் கூறியிருக்கின்றார். அதாவது, அவரது நாடாளுமன்ற உரை தொடர்பாக ஊடகம் ஒன்றிற்கு விளக்கமளிக்கும் போது மீண்டும் இக்கருத்தை தெரிவித்துள்ளார்.

இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் சிங்கள ஆட்சியாளர்களால் தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்டு வந்த அடக்கு முறைகள், இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இனக்கலவரங்கள், இவற்றால் தமிழ் மக்கள் எதிர்கொண்ட பாதிப்புக்கள் என்பனவற்றை தெரியாதோர் எவரும் இருக்க முடியாது.

தமிழ் மக்கள் மீதான அடக்குமுறைகளை பல சிங்கள புத்திஜீவிகளே வெளிப்படுத்தியுள்ளனர். விக்னேஸ்வரனுக்கும் இது தெரியாமலிருக்க முடியாது. ஆனால், அவர் நேரடியாகப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்காமல் இருந்திருக்கலாம் அதனால் அதன் வலியை அவரால் உணர முடியாமலிருந்திருக்கலாம்.

இன்று பெரும்பான்மையினரால் தமிழ் இனவாதியாக விக்னேஸ்வரன் அடையாளப்படுத்தப்படுகின்றார். தனது அரசியலுக்காக சில கருத்துக்களை அவர் முன் வைப்பதாகவும், அடுத்துவரும் வட மாகாண சபைத் தேர்தலில் அவரது புதிய கட்சியை வளர்ப்பதற்காக இவ்வாறு செயற்படுகின்றார் என்ற விமர்சனங்களும் முன்வைக்கப்படுகின்றது.

எது எவ்வாறாக இருந்தாலும், முதலமைச்சர் பதவியை விட நாடாளுமன்ற உறுப்பினராக இருப்பதே விக்னேஸ்வரனுக்குப் பொருத்தமானதாகத் தெரிகின்றது. முதலமைச்சராகச் செயற்படுவது என்பது நிர்வாகம் சம்பந்தப்பட்டது. அறிக்கைகளையும், கருத்துக்களையும் மட்டும் விடுத்துக்கொண்டு செயற்படுவது முதலமைச்சருக்கான பொறுப்பல்ல.

நீதியரசராக விக்னேஸ்வரனுக்கு உள்ள சட்டப் புலமையையும், வாதாடும் திறமையினையும், அவருக்குள்ள வரலாற்று அறிவையும் எதிர்வரும் காலத்தில் நாடாளுமன்றத்தில் அவர் வெளிப்படுத்தும் வாய்ப்பு உள்ளது. அதனால் நாடாளுமன்றத்திற்கு அவர் தெரிவானது பொருத்தப்பாடானதே.

தமிழ் மக்கள் தொடர்பில் தவறான வரலாற்றை நாடாளுமன்றத்தில் எவராவது முன்வைக்கும் போதும், தமிழ் மக்களின் பிரச்சினையை தவறான திசையில் யாரும் கொண்டு செல்ல முற்படுகையிலும் அதற்குக் கடுமையான பதிலடிகளை விக்னேஸ்வரன் வழங்குவார் என்று எதிர்பார்ப்போம்.



# பத்ரிநாத்...

02ஆம் பக்கத்தொடர்ச்சி



ரிஷிகேஷ்-தேவ்பிராயாக் வழியாக சென்று தரிசிப்பற்கு எட்டு நாட்கள் தேவை படும். இங்கு தங்குவதற்கு நவீன ஹோட்டல்கள் மற்றும் தரமான தர்மசாலைகளும் உள்ளன. பத்ரிநாத் யாத்ரையை மேற் கொள்ளும்போது அலக்நந்தா நதிக்கரை யில் அமைந்துள்ள திருத்தலங்களைப் பற்றிய விவரங்களை அடுத்த இதழில் காணலாம்.

# ஆதன...

04ஆம் பக்கத்தொடர்ச்சி

கூறலின்படி ஆதனத்தின் விலையில் 18% வரையிலான இறக்கம் எதிர்காலத்தில் ஏற்படலாம் எனத் தெரியவருகிறது. எதற்கும் ஆழமறிந்து காலை வைப்பதால் எதிர்பாராத நிலையிலிருந்து ஓரளவு தப்பித்துக் கொள்ளலாம்.



# வடமாகாண...

05ஆம் பக்கத்தொடர்ச்சி

5.7. 2004-2009இன் முன் ஆங்கிலக் கல்வியின் தரத்தை உயர்த்துவதற்காக, LIGHT HOUSE SCHOOLS மற்றும் RESC ஆகிய செயல்திட்டங்கள் கல்வி அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்பட் டன. அதற்குப் பெறுமதியான கல்வி உபகரணங்களும் ஆங்கில நூல்களும் மற்றும் நிதியும் கல்வி அமைச்சினால் ஒதுக்கப்பட்டது. அவற்றின் மூலம் ஆங்கிலக் கல்வி மேம்படுத்தப்பட்டது. தற்பொழுது நிதி வருவதில்லை. அவை தற்போது செயற்படுவதில்லை ஆயினும் அவற்றை முடுமாறு கல்வி அமைச்சு அறிவிக்கவில்லை. ஆனால் அவை தொடர்பான பயிற்சிகளில் கலந்து கொண்டோர் அதனைத் தொடர்ந்தும் செயல்படுத்தியிருந்தால், ஆங்கில பாடத்திலான கல்வி நன்கு வளர்ச்சி யடைந்திருக்கும்.

5.8. சிறிய வாசிப்புத் துணை நூல்களை வாசிக்கும் பழக்கத்தை ஆசிரியர்கள் ஏற்படுத்தித் கொடுப்பது குறைவாகக் காணப்படுகின்றது.



5.9. சிறிய நாடகங்கள் (Roll Play), உரையாடல்கள் (Dialogue) போன்ற வற்றைக் குழுவாக முன்வைக்கச் செய்யும் பொழுது இயல்பாகவே மாணவர்களின் ஆங்கில மொழித் திறன் அதிகரிக்கும்.

5.10. வினாத்தாள்களில் தொடர்ச்சியான பயிற்சிகள் வழங்கி வரவேண்டும்.

(அடுத்த இதழில் நிறைவு பெறும்)

# இலங்கையின்...

03ஆம் பக்கத்தொடர்ச்சி

எரின் ஓடுல் 2000ஆம் ஆண்டில் றெபீக்கா (Rebecca)ஐத் திருமணம் செய்தார். இவர்களுக்கு மோலி (Mollie) என்ற மகளும் ஜக் (Jack) என்ற மகனும் உள்ளனர்.



பெண்களுக்குக் கருக்கலைப்புச் செய்யும் உரிமை உண்டு எனக் கூறியவரும், LGBTQ மக்களின் உரிமைகளுக்கு ஆதரவாக வாக்ளித்தவருமான எரின் ஓடுல், தனது தலைமையில் பழமைவாதக் கட்சி உறுப்பினர்களுக்குத் தமக்கு விரும்பிய கொள்கையைத் தெரிவுசெய்யும் உரிமை உண்டு எனவும் கூறுகிறார்.

பழமைவாதக் கட்சித் தலைவர் தேர்தலில் வெற்றி பெற்றவுடன் ஆற்றிய உரையில் எரின் ஓடுல், "நீங்கள் கறுப்பு அல்லது வெள்ளை அல்லது மண்ணிறமானவராக இருக்கலாம், நீங்கள் எந்த இனத்தவராகவோ (Race) அல்லது எந்த நம்பிக்கை (Creed) உடையவராகவோ இருக்கலாம், அல்லது நீங்கள் LGBTQ ஆகவோ அல்லது Straight ஆகவோ இருக்கலாம், நீங்கள் கனேடியப் பழங் குடியினத்தவர்களாகவோ அல்லது மூன்று தலைமுறைக்கு முன்னர் கனேடிய சமூகத்தில் இணைந்தவர்களாகவோ அல்லது மூன்று கிழமைக்கு முன்னர் இணைந்தவர்களாகவோ இருக்கலாம், நீங்கள் செல்வச் செழிப்புடன் வாழ்பவ ராகவோ, அன்றாடம் உழைத்து வாழ்பவரா கவோ, அல்லது ஒரு தொழிற்சங்க உறுப்பினராகவோ இருக்கலாம், நீங்கள் இறைவனை வெள்ளிக் கிழமையில் வணங்குபவராகவோ, சனிக்கிழமையில் வணங்குபவராகவோ, ஞாயிற்றுக்கிழமை யில் வணங்குபவராகவோ, அல்லது இறை நம்பிக்கை அற்றவராகவோ இருக்கலாம். நீங்கள் எல்லோரும் கனடாவின் முக்கிய அங்கம், உங்கள் எல்லோருக்கும் கனேடியப் பழமைவாதக் கட்சியில் ஓர் இடம் உண்டு என நான் முற்று முழுதாக நம்புகிறேன்" என்றார்.





# கருவிலிருந்து கல்லறை வரை...!

எத்தனை எத்தனை இன்பம்? வாழ்வில்
எத்தனை எத்தனை துன்பம்? மண்ணில்
நித்தமும் மாண்டு மடிபவர் எத்தனை?
நிமிஷத்தில் ஜனம் பெற்று உயிர்ப்பவர் எத்தனை?
உத்தமராக வாழ்பவர் எத்தனை? உலகில்
உலுத்தர்களாக வாழ்பவர் எத்தனை? பெரும்
வித்தகராக வாழ்பவர் எத்தனை? விரும்பாத
வீணர்களாக இங்கு வாழ்பவர் எத்தனை?

இருளிருந்தால் நல்லொளியும் உண்டு வரும்
இன்பத்துக்கு பின்னால் துன்பமும் உண்டு
நெருப்பிருந்தா லணைக்க நீரும் உண்டு
நேசமிருந்தால் வெறுக்கும் மோசமும் உண்டு
விருப்பமிருந்தால் பொறுப்பும் உண்டு மாந்தர்
விழிப்புடன் வாழ்ந்தால் வாழ்வும் உண்டு
பெருமையும் சிறுமையும் அவரவர் கையில் உண்டு
பேடிகளானால் அழிவின் உச்சமும் உண்டு

இன்பத்தை விரும்பி ஏற்கும் உள்ளம்
இதமிலா துன்பம் வந்திட துவள்வதுமேனோ?
இன்பம் என்றால் பஞ்சுமெத்தை என்றும்
துன்பம் என்றால் முள்ளில் படுக்கை
இன்பம் வந்தால் உவக்கும் உள்ளம்
உற்ற துன்பம் வந்தால் உயிர் துறக்கலாமா?
தென்புகொண்டு யாவையும் அனுகுதல் நன்றே
தெளிவு பிறந்திட அழிவும் அகலுமின்றே!

கல்வியில் தோல்விகள் வருவதும் உண்டு
கல்வியால் மேன்மை வராமல் போவதுமுண்டு
சொல்லாமல் தீமைகள் வருவதும் உண்டு
சோகம் வந்தால் மனம் துவள்வதும் உண்டு
நெல்லினுள் மணியாய் பூத்த காதல் கசந்து
நெஞ்சினுள் நெருப்பை விதைப்பதும் உண்டு
எல்லாமே துயரம்தான் எல்லையிலா துன்பந்தான்




தற்கொலையாளர் தினம் -
September 10, 2020

எடுப்பீரோ முடிவுதனை இன்னுயிரைத் துறப்பதற்கு?


இன்பமும் துன்பமும் இருவிழிகள் போலாகும்
இரண்டும் இணைந்தாலே வாழ்வும் சமனாகும்
இன்பம் வருகையில் மகிழ்வதும் கொடிய
இருளெனத் துன்பம் வருகையில் அழுவதும்
தன்னம் பிக்கையிலா மாந்தர் செயலே
தாங்கொணாத் துயரம் நீங்கும் துணிந்தால்
சொன்னாலும் கேளார் மாந்தருள் பலபேர்
சோகம் தாங்கார் தன்னுயிர் மாய்பார்

துன்பத்தைக் கண்டு துவண்டிடலாமோ? துவண்டு
தூக்கினில் தொங்க நினைத்திடலாமோ? மனித
ஜென்மம் என்பது கடவுளீந்த வரம் இந்த
ஜெகத்தினில் அதனை இழந்திடலாமோ? இங்கு
துன்பம் யாருக்கில்லை? கருவிலிருந்து கல்லறைவரை
துன்பங்கள் மாந்தர்க்கு தொடர்ந்து வருமே
அன்னப் பறவையாய் வாழத் தெரிந்தால்
அமைதியும் மகிழ்வும் தேடியே வருமே!



கவிஞர் புரட்சிபாலன்
வன்கூவர்

# வார்த்தைப் பிரயோகத்தில் அவதானம் வேண்டும்



சி. நற்குணலிங்கம்
நெல்லியடி - இலங்கை


ஒவ்வொருவருக்கும் உடல் நலம் எவ்வளவு முக்கியமோ அதேபோல் மனநலமும் முக்கியமானதாகும். மனநலத்தைப் பாதுகாக்கப் பல வழிகள் உள்ளபோதும் அவற்றுள் சிறந்தது வார்த்தைகளைக் கையாளும் முறை. கூரிய வாளைவிட எமது வாயிலிருந்து வெளி வருகின்ற வார்த்தைகளுக்கு வலிமை அதிகம். வாழ்வின் மகிழ்வுக்கு, உறவின் பலத்துக்கு அன்பான சொல்லாடல் அவசியமானதாகும். எமது நாவிலிருந்து வெளிவரும் ஒரு வார்த்தை கூட மிகப் பெரிய எதிர் விளைவை ஏற்படுத்த வல்லது. இதனால்தான் எமது முன்னோர் நாகாக்க, எனக் கூறி வைத்துள்ளனர். அரசியல்வாதிகள், அரச, தனியார் ஊழியர்கள், குடும்பஸ்தர்கள், சாதாரண மனிதர் இவர்களில் பெரும் பாலானோர் வார்த்தைப் பிரயோகத்தில் அவதானக் குறைவாகவே நடந்து கொள்கின்றனர். இதனால் இங்கு நாமே நமக்குப் பழி தேடுவதுடன், குழியும் தோண்டுகின்றோம்.

உன்னை தாழ்த்திப் பேசும்போது ஊமையாய் இரு, உயர்த்திப் பேசும்போது செவிடனாய் இரு, வாழ்வில் எளிதில் வெற்றி பெறுவாய் என்றார் சுவாமி விவேகானந்தர். அன்பான வார்த்தைகளுக்கான செலவு அதிகம் இல்லை, ஆனாலும் அவை சாதிப்பது அதிகம் என்றார் பிலைஸ்பாஸ்கல். சொன்ன சொல்லும், எய்த அம்பும், கடந்த கால வாழ்வும், அசட்டையாய்க் கைவிட்ட வாய்ப்பும் திரும்பி வரமாட்டா என்பது அராபியப் பழமொழி. மனிதன் தன் பெரும்பாலான துன்பங்களைத் தன் பேச்சின் மூலமாகத்தான் தேடிக்கொள்கின்றான் என்ற பொன்மொழிக்கு உரியவர் ரேபியா. ஒரு நல்ல கருத்தைச் சொல்பவன், நல்ல பரிசு ஒன்றைக் கொடுப்பவன் ஆவான். இது இயேசுநாதர் அருளிய வரிகள். சொல் பற்றி வள்ளுவர் கூற்று, பேசுவோருக்கும் கேட்போருக்கும் இடையில் பிரிக்க முடியாத இணைப்பை சொல் ஏற்படுத்த வேண்டும். திறன் அறிந்து சொல்லைப் பயன்படுத்த வேண்டும். இடம், பொருள், காலம், பயன் என்பவற்றை அறிந்து பேசவேண்டும். இனியாவது வார்த்தைப் பிரயோகத்தில் அவதானமாக இருங்கள். ஏன்? இதைப் புரிந்து கொள்வதில் பின்னிற்கிறீர்கள்.

நாவால் கெட்டழிந்தோர் பலர், முன்பின் சிந்திக்காது வார்த்தைகளை அள்ளி வீசும் போது வேதனைகளை அள்ளி வீசுவதாக எண்ணுவதில்லை. வார்த்தைகளைக் கொட்டிய பின்னர் வருந்துவதால் எந்தப் பயனும் இல்லை. மனதுக்கு இதமளிக்கும் வார்த்தைகளைப் பேசுவதால் கேட்பவரின் துன்பங்கள், கவலைகள் நீங்கிவிடும். மன அமைதியை ஆறுதல் வார்த்தைகளே வழங்கக் கூடிய வல்லமை கொண்டவை. மற்றவர்களுக்கு ஆறுதல் அளிக்கும் விதத்தில் நடந்து கொள்ளும் உயர்ந்த பண்பு பலரிடம் இல்லாதிருப்பது வருந்தத்தக்கதாகும்.

மனைவிகூட தனது கணவனின் அன்பான வார்த்தைகளுக்காகவே எப்போதும் காத்திருப்பாள். அன்றாட வேலைப்பளு, கவலைகள், மன அழுத்தங்கள், யாவும் அவ்வார்த்தைகளால் அமைதி அடைந்துவிடும். வீட்டில் பிள்ளைகளுடன் அன்பான வார்த்தைகள் கூறி மகிழ்வோமாக இருந்தால் பிள்ளையின் மனம் மகிழ்ச்சி அடைந்து எதிர்காலம் ஒளிமயமாகும். அலுவலகங்களில் மேலதிகாரிகள் தமக்குக்கீழ் பணிபுரியும் ஊழியர்களைப் பணி நிமித்தம் பாராட்டுவார்களாயின் பணிகள் சிறக்கும். அலுவலகம் முன்னேற்றம் காணும். அன்பான ஆறுதலான வார்த்தைகளுக்கு ஏங்கித் தவிக்கும் முதியோர்களுடன் இவ்வாறான வார்த்தைகளைப் பயன்படுத்துவதன்மூலம் அவர்கள் ஆறுதல் அடைவர். பொதுவாக எம்மால் ஏனையோருக்கு உதவி செய்ய முடியுமோ இல்லையோ ஆனால் நிச்சயமாக ஆறுதல் வார்த்தைகளைக் கூறி அவர்களின் உள்ளக் குமுறல்களை, வேதனைகளைக் குறைக்க முடியும். ஆனால் நாம் அதை செய்ய விரும்புவதில்லை. அதற்கு மனம் இடம் கொடுப்பது குறைவாகவே உள்ளது.

நாம் எப்போதும் இதமான வார்த்தைகளைப் பயன்படுத்தும் வகையில் நடந்து கொள்வதன்மூலம் மற்றவர்கள் எம்மை விரும்பி ஏற்றுக்கொள்ளும் நிலை உருவாகும். இவ்வாறில்லாது கடினமான வார்த்தைகளைப் பாவிப்பதால் மற்றவர்களிடமிருந்து பெரும்பாலானோர் விரக்தியின் மத்தியிலேயே வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். எனவே இவர்களிடமிருந்து வரும் வார்த்தைகள் மரியாதைக் குறைவானதாகவும், மதிப்பற்றதாகவும் காணப்படுகின்றன. வாயால் வார்த்தைகளை வெளியிடும் போது நாம் மிகவும் அவதானத்துடன் நடந்து கொள்ள வேண்டும். இதமான வார்த்தைகளால் மற்றவர்களது இதயத்தைக் கொள்ளை கொள்ள வேண்டும். ஆனால் சிலர், எப்போதும் மற்றவர்களைக் குறை கூறுவதாகவும், கேலி செய்வதாகவும் நடந்து கொள்கின்றனர். இவர்களது நாவிலே சனி குடிகொண்டுள்ளதாக விமர்சிப்பர். இது அவர்களுக்குப் புரிவதில்லை. இவர்களின் இத்தகைய வார்த்தைப் பயன்பாடு நிரந்தரமான எதிரிகளை இவர்களுக்கு சேர்த்து வைக்கின்றது. பிரச்சனைகள் ஏதுமிருப்பின் பேசித்தீர்த்துக் கொள்ளலாம். அதை விடுத்து மனம் போன போக்கில் பேசுவது ஏற்றுக்கொள்ள முடியாதது.



வெளியே கொட்டிய வார்த்தைகளை எம்மால் ஒருபோதும் திரும்பவும் பொறுக்கி எடுக்க முடியாது. இயற்கை எமக்கு வழங்கிய உறுப்பை அவதானமாகப் பயன்படுத்துவது எமது கடமையாகும். தன்னை எல்லா விதத்திலும் அடக்கப் பழகியவன் வெளியிலுள்ள எதற்கும் வசப்படுவதில்லை என விவேகானந்தர் கூறியுள்ளார்.

வார்த்தைப் பிரயோகத்தில் அவதானம் வேண்டும் என்பதில் அவதானமாக இருக்க வேண்டும். அதன் முக்கியத்துவத்தைப் புரிந்து கொண்டால் அவதானமாக இருக்கச் சொல்லும். ஒரு முறை பேச இரு முறை யோசி. எதுவும் சில காலம் தான். ஏழைக்கு முன்னால் நின்றுகொண்டு உனது செல்வம் பற்றிப் பேசாதே, நோயாளிக்கு முன் நின்று கொண்டு ஆரோக்கியத்தைப் பற்றிப் பேசாதே, பலவீனமானவனுக்கு முன்னால் நின்று உனது பலம்பற்றிப் பேசாதே, மகிழ்ச்சியை இழந்தவனுக்கு முன் உன் சந்தோசம் பற்றிப் பேசாதே, சிறைக் கைதிக்கு முன்நின்று உன் சுதந்திரம் பற்றிப் பேசாதே, குழந்தைப் பாக்கியமற்றவனுக்கு முன்நின்று குழந்தையைப் பற்றிப் பேசாதே, அனாதைக்கு முன்நின்று பெற்றோர் பற்றிப் பேசாதே. உன் மதிப்பு உனது நாக்கில் உள்ளது. அன்பான சொல் மருந்தாக இருப்பதோடு வாழ்த்தவும் செய்கிறது. எந்த வார்த்தை பேச வேண்டும் என்று அறிந்து பேசுவதைவிட, எந்த வார்த்தையைப் பேசக்கூடாது என்பதை உணர்ந்து பேசுபவரே சமூகத்துக்கு வேண்டியவர் ஆவார்.

சில விடயங்களில் எங்கள் அபிப்பிராயங்களைப் பேசாமல் வாய் மூடியிருப்பது மேலானது. இருக்கும் இடம் அறிந்து விடயத்தை நன்கு புரிந்து குணமறிந்து பேசலாமா அல்லது விடலாமா எனச் சிந்திக்க வேண்டும். மதிப்பு என்பதே என்னவென்று தெரியாத கூட்டத்தில் மாட்டிக்கொண்டு அவஸ்த்தைப் படுவதை விட பேசாதிருப்பது நல்லது. இது கோழைத்தனமானதல்ல. உட்பூசலுடன் இயங்குவோர், பொறாமைக்காரர்கள், நல்ல விடயங்களைக் காதில் போட்டுக் கொள்ளவே மாட்டார்கள். யாராக இருந்தாலும் பேசுமுன் உங்களை நிதானப்படுத்திக் கொள்ளுங்கள். நான்கு முட்டாள்கள் மத்தியில் நல்ல அறிவாளி எதுவுமே பேசமாட்டான். மனம் திறந்து பேசுங்கள், ஆனால் மனதில் பட்டதெல்லாம் பேசாதீர்கள், சிலர் புரிந்துகொள்வர், சிலர் பிரிந்து செல்வர்.

அதிகமாகப் பேசினால் அமைதியை இழப்பாய், ஆணவமாகப் பேசினால் அன்பை இழப்பாய், வேகமாகப் பேசினால் அர்த்தத்தை இழப்பாய், கோபமாகப் பேசினால் குணத்தை இழப்பாய், வெட்டியாகப் பேசினால் வேலையை இழப்பாய், வெகு நேரம் பேசினால் பெயரை இழப்பாய், பெருமையாகப் பேசினால் ஆண்டவனின் அன்பை இழப்பாய். இனியாவது வார்த்தைப் பிரயோகத்தில் அவதானமாக நடப்பீர்களா? தனியாக இருக்கும்போது சிந்தனையிலும், கூட்டத்தில் இருக்கும் போது வார்த்தையிலும் கவனமாக இருக்க வேண்டும். ஊரோடு சேர்ந்திருக்க, உறவோடு மகிழ்ந்திருக்க, மக்களோடு உறவாட, சமுதாயத்தோடு தோழமை கொள்ள வார்த்தைப் பிரயோகத்தில் அவதானம் வேண்டும்.

பிறருடன் ஒருவர் எப்படி உரையாட வேண்டும் என்பதைப் பலரும் புரியாமல், எந்த இடத்தில் எப்படி வார்த்தைகளைப் பிரயோகிக்க வேண்டும் என்பதையும் புரியாமலும் பேசுவதால் இன்று எல்லா விடயங்களிலும் வெற்றியைவிட வாழ்வில் தோல்விகளைத்தான் தழுவுகின்றனர். எனவே எமது வாழ்வியலில் வார்த்தைப் பிரயோகத்தில் அவதானம் வேண்டும். இல்லையேல் வாழ்வில் நிம்மதியை இழக்க நேரிடும்.

விளம்பரம்
VLAMBARAM™
30 ஆவது ஆண்டில்
பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப் பொறுப்பாளர்: விஜய் செல்லையா
அலுவலக பொறுப்பாளர்: பிரசாந்தி அருள்தாசன்
பதிப்பு: Canyon Press Inc.

'விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்' நிறுவனத்தால் வெளியிடப்படும் 'விளம்பரம்' பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசிரியரின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059/ FAX: 416-286-0344
email:vlambaram@sympatico.ca
web: www.vlambaram.com

Vlambaram Publications Inc. 2020 All Rights Reserved

MATH & PHYSICS TUTORING
By a well-qualified and experienced teacher
For all grades from Grade 4 to 1st year of university
Special classes
- Advanced function
- Calculus & vectors
- Data management
All Classes available in Scarborough & Stouffville
Contact: 647.340.9490 / 416.732.2228



Mr.S.F.Xavier (Teacher)

# இனி முழுநேர அரசியல்தான்!

## நேர்காணல் - ஜீவஜோதி நேர்கண்டவர் - கண்ணன்

ஜீவஜோதிக்கு அறிமுகம் தேவையில்லை. தமிழகம் முழுவதும் பரபரப்பாகப் பேசப் பட்ட பெயர். தனது காதல் கணவர் கொலைக்கு நியாயம் கேட்டு, தமிழகத்தில் மிக செல்வாக்கு மிக்கவரான சரவணபவன் உணவகம் உரிமையாளருக்கு எதிராக நடத்திய சட்டப் போராட்டத்தில் கடைசி வரை உறுதியாக இருந்து வெற்றி பெற்றவர். சில வருடங்கள் அமைதியான வாழ்க்கைக்குப் பின்னர், பாஜகவில் இணைந்த ஜீவஜோதிக்கு, சமீபத்தில் கட்சியில் முக்கிய பதவி வழங்கப்பட்டுள் ளது. மீண்டும் பரபரப்பாகியுள்ள ஜீவஜோதியை சந்தித்தோம்.

**திடீர் அரசியல் ஆர்வத்துக்கு என்ன காரணம்?**

எனக்கு பிடித்தமான கட்சி பாஜக. கடந்த சில ஆண்டுகளாக அரசியல் நடப்புகளை தொடர்ந்து கவனித்து வந்தேன். வீட்டில் தொலைக்காட்சி தொடர்களைக்கூட பார்க்கமாட்டேன். எப்போதும் நாட்டு நடப்பு செய்திகளையும் அரசியல் சம்மந்தப்பட்ட விஷயங்களை மட்டும்தான் பார்ப்பேன். 'ஒரு நாடகம் பார்க்க விடமாட்டேங்குற, பாட்டு பார்க்க விடமாட்டேங்குற' என்று அம்மா, மாமியார் எல்லோரும் கிண்டல் அடிப்பர். இப்படி அரசியல் நடப்புகளை தொடர்ந்து கவனித்து வந்தபிறகே பாஜகவில் இணைந்தேன். இன்று இந்தியா முழுவதும் படித்தவர்கள் பிரதமர் மோடியை நம்புகின்றனர். அவராலே பாஜகவிற்குப் பெரிய ரசிகையாகவே மாறிவிட்டேன். பாஜகவிலுள்ள கருப்பு முருகானந்தம் அண்ணன்தான் நான் பாஜகவில் சேரக்காரணம். எனது கணவரின் நண்பர் அவர். எங்களுக்குப் பலமான ஆதரவாக இருப்பதோடு, நான் பாஜகவில் சேர உந்துதலாக இருந்ததும் அவரே. இனி முழுநேர அரசியலில் இறங்கிக் கட்சிக்காகப் பணிபுரிவேன்.

**எல்லோரும் என்ன சொன்னார்கள்?**

எனது செல்போன் சார்ஜர் இல்லாமல் ஆஃப் ஆகவே ஆகாது. ஆனால், பாஜகவில் இணைந்த தகவலால் எனக்குத் தொடர்ந்து அழைப்புகள் வருகின்றன. எல்லோரும் சந்தோஷமாகப் பாராட்டுகின்ற னர். தொடர் அழைப்புகளாலேயே எனது போன் ஆஃப் ஆகிவிட்டது என்றால் பார்த்துக் கொள்ளுங்கள். வானதி சீனிவாசன் அக்கா உட்பட எல்லோரும் வாழ்த்தினர். முழுநேர அரசியல்வாதியாக இனிப் பணிபுரிவேன். வீட்டில் நான் எடுக்கும் முடிவுக்கு உறுதுணையாக இருப்பார்கள்.

**ஏற்கனவே தையல் தொழில், தற்போது புதிதாகப் பெரிய உணவகம் திறந்திருக்கிறீர்கள்? இத்தனைக்கும் நடுவே அரசியலுக்கு நேரம் எப்படி ஒதுக்குவீர்கள்?**

உணவகத்தை நிர்வாகம் செய்வது எல்லாம் அம்மாதான். எனது கணவர் ஏற்றுமதி தொழிலை பார்த்துக் கொள்கிறார். தையல் தொழிலில் மணப்பெண் அலங்கார ஜாக்கெட்டுகள்



தைப்பது தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அதற்காக ஒரு குழுவே உள்ளது. உணவகம், தையல் தொழில் என்று மொத்தம் 70 பேர் வரை பணி புரிகின்றனர். வீட்டில் இருந்துகொண்டே கூடப் பல பெண்கள் பணிபுரிகின்றனர். என்னுடன் பணிபுரிவோரும் குடும்பமும் உறுதுணையாக இருக்கும்போது, எனக்கு நேரம் ஒரு பிரச்சினையே இல்லை.

**ஜீவஜோதிக்குப் பிடித்த அரசியல் தலைவர்?**

எந்த மாற்றுக் கருத்துமே கிடையாது. ஜெயலலிதா அம்மாதான். நான் ஆறாவது படிக்கும்போது, அவரை நடிகையாகப் பிடிக்கும். விவரம் தெரியத் தெரிய அவரின் ஆளுமை, திறமை, துணிச்சல் போன்றவற்றால் ஈர்க்கப்பட்டேன். இவை எல்லாவற்றிற்கும் மேலாக, தனிப்பட்ட முறையில், எனது வழக்கிற்கு எல்லா உதவிகளையும் செய்தவர். அம்மா மட்டும் உதவவில்லை என்றால், இந்த வழக்கு இவ்வளவு தூரம் வந்திருக்காது. நீங்கள் பார்க்கும் துணிச்சலான ஜீவஜோதியை உருவாக்கியவர் ஜெயலலிதாதான். அவர் மீது எப்போதும் எனக்கு பெரும் மரியாதை உண்டு. என் உயிர் இருக்கும் வரை ஜெயலலிதா அம்மாவை மறக்க முடியாது.

**ஆனால், அதிமுகவில் சேராமல் ஏன் பாஜகவில் சேர்ந்தீர்கள்?**

பாஜக கண்டிப்பான, கட்டுக்கோப்பான கட்சி. யார் வேண்டுமென்றாலும் பேசலாம், என்ன வேண்டுமென்றாலும் பேசலாம், விமர்சிக்கலாம் என்ற நிலை இல்லை. இந்தக் கட்டுப்பாடுகள் எனக்குப் பிடிக்கும். பாஜக உயர்மட்டத் தலைவர்களின் பேச்சு வித்தியாசமாக இருக்கும். உயர்ந்த சிந்தனையாக இருக்கும்.

**உங்கள் இளம் வயதில் பெரும்பகுதி சட்டப் போராட்டத்தால் கழிந்துள்ளது. இதனால் இழந்தது என்ன?**

எல்லோரும் பேசக்கூடிய தீர்ப்பு வந்தது. இவ்வளவு நாள் போராடியதற்கு அந்தத் தீர்ப்பு ஓர் ஊக்கம். எனக்கு உள்மனதில் தீர்ப்பு இப்படித்தான் வரும் என்பது தெரியும். ஏனென்றால், உண்மை என் பக்கம் இருந்தது. 135 பேர்வரை சாட்சி யாக இருந்தனர். ஒருவர்கூட சோடை போகவே இல்லை. நான் தொழிலில் கால் பதிக்கவும் மறுமணம் செய்துகொள்ளவும் காரணம் துணை ஆணையர் ராமச் சந்திரன் சார்தான். இப்போது அவர் ஓய்வு பெற்றுவிட்டார். எனக்கு அப்போது மறு மணம் செய்துகொள்ள வேண்டும் என்ற எண்ணமெல்லாம் இல்லை. ஆனால், எதிர்காலத்தில் பாதுகாப்புக் கருதி திருமணம் செய்துகொள்ளக் காரணமாக இருந்ததும் அவர்தான். எனது கணவர் பாண்டு (தண்டபாணி) எல்லாவற்றிற்கும் உறுதுணையாக இருக்கிறார்.

எனக்கு ஜெயலலிதா அம்மா திருவாரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அரசு வேலைக்கு ஏற்பாடு செய்தார். அப்போதிருந்த சூழ்நிலையில் எனக்கு அந்த வேலைக்குப் போகப் பிடிக்க வில்லை. அதனால், ராமச்சந்திரன் சாரிடம் நேரடியாகவே சென்று மன்னிப்புக் கேட்டேன். 'வெளியில் செல்ல விருப்ப மில்லை. எல்லோரும் ஒரு மாதிரியாகப் பேசுவார்கள். மனது கஷ்டமாக உள்ளது' என்றேன். ஆனாலும், ஒரு வருடம் கழித்துத்தான், என்னிடம் கேட்டபிறகே அதை தள்ளுபடி செய்தனர்.

**போராடும் பெண்களுக்கு உங்களின் ஆலோசனை என்ன?**

இவங்க அப்படி நினைச்சிக்குவாங்களோ, அவங்க அப்படி நினைச்சிக்குவாங்களோ என்று நினைத்தால், கண்டிப்பாக நமது வாழ்க்கை வீணாகிவிடும். நம் வாழ்க்கையை நம்மால்தான் காப்பாற்றிக் கொள்ள முடியும். இன்று நம்மை ஏளனம் பேசுபவர்கள் நாளை நாம் கஷ்டப்படும் போது உதவப் போவதில்லை. அதனால், உங்களுக்காக மட்டுமே வாழுங்கள். நான் அப்படி நினைத்திருந்தால் இந்த உயரத்திற்கு வந்திருக்க முடியாது. எந்த விஷயமாக இருந்தாலும் முதலில் குடும்பத்திடம் சொல்லி ஆலோசனை செய்தாலே, அவர்கள் உறுதுணையாக இருப்பார்கள்.

ஒரு 'உண்மை'
பல
'பொய்களால்'
தோற்றுப் போனாலும்..

ஒரு நாள்
'உண்மை'
பல
பொய்களை தோற்கடித்தே
தீரும்...





A new Project by TRIDEL....."MRKT Alexandra Park"
Spadina and Dundas..Toronto
SQ
SQ²
SPADINA AVE
MRKT
DUNDAS ST. W.
Coming soon.....
TRIDEL
BUILT FOR LIFE
416.321.6969
HomeLife / GTA Realty Inc. Brokerage*
HOMELIFE
HIGHER STANDARDS
5215 Finch Ave. E., #203, Toronto ON. M1S 0C2
*Independently Owned & Operated


Let's continue
to protect ourselves!
Cough into
your sleeve
Wash
your hands
2 m
Keep your
distance
Mandatory for people age 12 and over on public transit and in most enclosed and partially enclosed public places.
Cover your face
(if less than two metres)
Québec.ca/coronavirus
1 877 644-4545
Votre gouvernement
Québec

# புதிய புத்தகங்கள் - திரைப்படங்கள்

## தலித் பார்ப்பனன்- சரண்குமார் லிம்பாலே

**– ரதன் –**

மொழிபெயர்ப்பு - ம. மதிவண்ணன்

அமெரிக்காவில் ஆபிரிக்க-அமெரிக்க மக்கள், அரச இயந்திரங்களால் ஒடுக்கப் படுவதற்கு எதிராகப் போராட்டங்கள் தொடர்கின்றன. அங்கு 12 வயதுக்குட்பட்ட ஆபிரிக்க-அமெரிக்க மாணவர்களில் 35 வீதமானோர் திட்டமிட்டு ஏதோ ஒரு காரணத்துக்காகப் பாடசாலையிலிருந்து வெளியேற்றப்படுகின்றனர். அதேபோல் கல்லூரிக்குச் செல்லும் மாணவர்களில் 70 வீதமானோர் திட்டமிட்டு வெளியேற்றப்படு கின்றனர். அமெரிக்க சிறையில் உள்ளோரில் சுமார் 60 வீதமானோர் கறுப்பின மற்றும் ஹிஸ்பானியர்கள் ஆவர்.

ஒடுக்கப்பட்ட இனமாகப் புலம் பெயர்ந்த மக்கள் இன்னமும் ஆபிரிக்க அமெரிக்கர்களை மிக மோசமானவர்களாகவே சித்தரிக்கின்றனர். அண்மைக்காலங்களில் சமூக வலைத் தளங்களிலும், இணையங்களிலும் இதனை வெளிப்படையாகவே பார்க்கக் கூடியதாகவுள்ளது.

கனடா-அமெரிக்கா நிலத்தின் முதல் குடிகள், இன்று ஒடுக்கப்பட்டு வாழ்வதற்கு மிகவும் கடினமான பிரதேசங்களில் வாழத்தள்ளப்பட்டுள்ளனர். அதேபோன்ற நிலைக்கு அமெரிக்காவில் வாழும் ஆபிரிக்க அமெரிக்கர்களை தள்ளுவதற்கான முயற்சிகள் காலம் காலமாக நடைபெற்று வருகின்றன.

இந்தியாவிலும் தற்போதைய அரசு திட்டமிட்டுத் தலித் மக்களினது பொருளாதார கல்வி மையங்களளை அழித்து வருகின்றது. இந்நிலையில் 2016 இறுதியில் கறுப்பு பிரதிகள் வெளியீடாக சரண்குமார் லிம்பேயின் 'தலித் பார்ப்பனன்' சிறுகதைத் தொகுப்பு வெளிவந்துள்ளது. மராத்திய மொழிப் பேராசிரியரான சரண்குமார் லிம்பேயின் இந்நூலை மிகச் சிறப்பாக இயல்பான மொழியில் ம.மதிவண்ணன் மொழிபெயர்த்துள்ளார். நூலாசிரியருக்கு தற்போது 62 வயதாகின்றது. அவர் தனது வயதின் இருபதுகளின் பின் பகுதியிலிருந்தபோது இவை எழுதப்பட்டுள்ளன. இன்றும் இதே நிலையே தொடர்கின்றது.

இந்நூலில் உள்ள கதைகளில் நான்கு கதைகள் கல்வி நிலையங்கள் குறிப்பாக பல்கலைக்கழகங்களில் நடைபெறும் ஒடுக்கு முறைகளை பதிவு செய்துள்ளன. தலித் மாணவர்கள், பேராசிரியர்கள் மட்டுமல்ல இங்கு பெண்களும் ஒடுக்கப்படுவதை நூலாசிரியர் சுட்டிக் காட்டுகின்றார். நூலில் உள்ள ஒவ்வொரு கதையும் ஒடுக்கு முறையின் வடிவங்களைப் பதிவு செய்கின்றன. முற்போக்கானவர் கதையில் தலித் பெண்களை உயர் சாதியினர் திட்டமிட்டு பாலியல் வன்புணர்வுக்குட்படுவதை பதிவு செய்துள்ளார். (இது இவரது சுயசரிதையில் விரிவாக எழுதப்பட்டுள்ளது) அதேசமயம் தன்னை முற்போக்கானவர் என்று கூறிக் கொள்ளும் பேராசிரியர் தான் அவருக்குக் கூறிய கதையை நாவலாக்கிப் பெயரும் புகழும் அடைவதை வலியுடன் வெளிப்படுத்தியுள்ளார். (புலம் பெயர் அகதி வாழ்வின் கதைகளும் இயக்க கதைகளும் இடைத்தரகர்களால் விற்கப்பட்டு திரிபுபட்டு பதிவாகியுள்ளன.)

பிள்ளையார் சதுர்த்தி என்ற கதையில்
தேவாலய மணி அடித்தது
எல்லாரும் உள்ளே போனார்கள்!
மசூதியிலிருந்து தொழுகை அழைப்பு
கேட்டது எல்லாரும் உள்ளே போனார்கள்!




இந்துக் கோயில் மணி அடித்தது
கொஞ்சம் பேர் உள்ளே போயினர்
கொஞ்சம் பேர் வெளியே நின்றிருந்தனர்!

பிறந்து ஒரு முப்பது வயதுக்குள்ளான ஒரு மனிதனின் வாழ்க்கைப் பயணமே இக்கதைகள். தலித் என்ற அடையாளத்தின் மேல் அம்மனிதன் சந்தித்த தடைகள், எச்சரிக்கைகள், பழிவாங்கல்கள், இழப்புக்கள் போன்றவற்றின் தொகுப்பு இது. அம்மனிதனின் எதிர்ப்புணர்வு, மேல் சாதியினரின் ஆதிக்க மனோபாவம் மீதான கண்டனங்கள் போன்றவற்றுடன், இந்திய சமூகம் கட்டுடைக்கப்பட்டுப் புதிய சமூகம் ஒன்று உருவாக்கப்படுவதன் அவசியத்தையும் போன்றனவற்றையும் நூலாசிரியர் வெளிப்படுத்தியுள்ளார்.

இந்த நூலை வாசித்து முடித்தபோது மல்கம் எக்ஸின் முக்கிய உரைகளில் ஒன்றான 'The Ballot or the Bullet' (வாக்கா அல்லது சன்னமா?) என்ற உரை ஞாபகத்திற்கு வந்தது.

அதிலிருந்து, நான் அரசியல்வாதியல்ல, அரசியல் மாணவனுமல்ல, சனநாயகவாதியுமல்ல, குடியரசாளனுமல்ல. ஏன் நான் ஒரு அமெரிக்கனுமல்ல. இத்தாலிய அகதிகள் ஏற்கனவே அமெரிக்கர்களாகி விட்டனர். ஐரோப்பாவிலிருந்து வந்த நீல நிறக்கண்கள் கொண்டோர் அமெரிக்கர்களாகி விட்டனர். நாங்கள் இங்கு வாழும்வரை அமெரிக்கர்களாக முடியாது.

நான் உங்கள் மேசையில் அமர்ந்து உணவு உண்ண அமர்கின்றேன். எனது கோப்பையில் எதுவுமில்லை. உங்களுடன் இருப்பதனால் உணவு உண்டதாக முடியாது. அமெரிக்காவில் இருப்பதனால் நாங்கள் அமெரிக்கர் ஆக முடியாது. நான் அமெரிக்கனில்லை. நான் பாதிக்கப்பட்ட 22 மில்லியன் கறுப்பின மக்களுள் ஒருவன். சனநாயகத்தால் ஒடுக்கப்பட்டவர்களுள் ஒருவன் படிற்றொழுக்கத்தால் பாதிக்கப்பட்வர்களுள் ஒருவன் அமெரிக்க ஒருங்கியத்தால் மண்டலத்தால் ஒடுக்கப்பட்டவர்களுள் ஒருவன். நான் இங்கு நின்று ஓர் அமெரிக்கனாகப் பேசவில்லை. அமெரிக்க ஒருங்கியத்தால் பாதிக்கப்பட்டவனாகவே பேசுகின்றேன். நான் அமெரிக்கக் கனவு காணவில்லை. மாறாக அமெரிக்க அச்சுறுத்தும் கனவையே காண்கின்றேன்.

(தொடர்ச்சி 13ஆம் பக்கம்...)



A Math tutorial416

Answers to tutorial 415

1) Let the square area removed from 4 corners be x.x = xcm ², so the sides of the bottom will br 20 -2x and 10 -20 , the height of the box will be x cm ,so
X(20-2x)(10-2x) =144
4x (10-x)(5-x) 144
$4x(50-10x-5x+x^2)$ =144
$X(x^2-15x+50)$ =36
$X^3-15x^2+50x-36=0$
(x-1) is one of the factores, when x=1 the diamensions of the box will be
18x8x1 =144

2)f(-2) =-8+8-2k-4 =-2k -4
F(2) = 8+16+2k -4
Therefore -2k -4 =2(2k+20)
K=-6

3) -5 < x<-3 , x> 1

4)30≤

$3(2x+4)-2(x+1)\leq 46$

$30\leq 6x+12-2x-2\leq 46$

$30\leq 4x+10\leq 46$

$30-10\leq 4x+10-10\leq 46-10$

$20\leq 4x\leq 36$

$5\leq x\leq 9$

Tutorial 416

Questions

1)A box of thumbtacks contains 15 red and 20 blue tacks .If 10 tacks are drawn at random from the box , what is the expected number of red tacks drawn?

2)At a certain corner you need ten seconds on average to cross the street .If during 70% of the ten second intervals there is traffic on the street, how long you expect to wait to cross

3)In lotto 6/49 , 6 numbers are chosen at random without replacement from the set {1You will win first prize if the numbers you have chosen match the numbers.What is the probability you win the 1st prize


By Mrs.F.Xavier(Teacher)6473409490

# புதிய புத்தகம்...

12ஆம் பக்கத்தொடர்ச்சி

## Shut up You're Pretty and Voices of Jordan

"Shut up You're Pretty" என்ற சிறுகதைத் தொகுப்பு. கொங்கோ நாட்டிலிருந்து கனடாவிற்குப் புலம் பெயர்ந்த Tea Mutonji இன் முதலாவது சிறுகதைத் தொகுப்பு. முதலாவது தலைமுறை கனேடியர்களின்




பார்வையில் புலம் பெயர்ந்த முதல் சந்ததியினர் சந்திக்கும் பிரச்சினைகளை நகைச்சுவையுடன் ஆசிரியர் சொல்லியுள்ளார். பாலியல் சுரண்டல், சமூக மட்ட நிலை வேறுபாடு, கலாச்சார மாற்றங்கள், ஆணாதிக்கம் போன்ற பல்வேறு பார்வைகளைக் கொண்ட 18 சிறுகதைகளைக் கொண்டது இந்நூல். தன்னுடன் தானே முரண்பட்டுக் கொள்ளும் சமூகத்தின் பன் முகத்தன்மையையும், சமூக நிறுவனத்தின் சிதைவினையும் இக்கதைகள் வெளிப்படுத்தியுள்ளன. Parchment Paper, Tilapia Fish, Men. Tricks and Money, Women Talking, Theresa is getting marries ஆகிய கதைகள் என்னை அதிகளவு பாதித்தன. இவரது ஒரு சிறுகதை முதலாவது பின்னூட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளது.

Voices of Jordan-ஜோர்டான் 90 வீதம் சுனி முஸ்லீம்களையும், மிகுதி சியா முஸ்லீம்களையும், கிறிஸ்தவர்களையும் கொண்டுள்ள நாடு. மத்திய கிழக்கில் உள்ள ஒரு சிறு நாடு. இன்னமும் அரசன் தான் ஆட்சியாளர். Voices of Jordan அந்நாட்டின் சாதாரண மக்களின் குரல் களைப் பதிவு செய்துள்ளது. கார்ட்டூன் கலைஞர், சிரிய அகதி, பெண் நாடாளு மன்ற உறுப்பினர், ஜிகாட் ஆதரவாளர், இராணுவ வீரர், பாலஸ்தீனத்திலிருந்து புலம் பெயர்ந்த குடும்பஸ்தர் எனப் பத்து பேரைப் பல தடவைகள் சந்தித்து, அவர்களினூடான ஜோர்டானின் முகங் களைப் பதிவு செய்துள்ளார் Rana F. Sweis. இவர் நியுயோர்க் ரைம்ஸ் போன்ற ஊடகங்களில் ஊடகவியலாளராக பணியாற்றியுள்ளார்.

நிச்சயமற்ற வாழ்வியலைப் பதிவு செய்துள்ள இந்நூல், ஜோர்டான் மக்களின் இருண்ட பகுதிகளையும், மத்திய கிழக்கின் அரசுகளுடன் மக்கள் முரண்பட்டு நிற்பதை இந் நூலினூடாகக் காணலாம். உருவாக்கப்பட்டுள்ள சமூகக் கட்டமைப்பில் தங்களை நிலைநிறுத்த இவர்கள் திண்டாடும் நிலை நூலினூடக வெளிப்படுத்தப்படுகின்றது. தமிழில் இவ்வாறான ஒரு முயற்சி நடைபெறாதா? என்ற ஏக்கத்தை Voices of Jordan ஏற்படுத்தியுள்ளது.

# மரமே நமது மதம்



வனம்
மரங்களின் "மா" நாடு!
அழகுகள் ஒன்றிய தேசம்!
ஐந்தறிவுகளின் ஐக்கிய தேசம்!
ஆறறிவால் அழியும் தேசம்!

அந்த பச்சை சீருடை
தொழிலாளியின்
மாத சம்பளம் தான் மழை
அதுவே ஆண்டு வருமானமாக
ஆறு தோறும்!

வனம்
நம் நுரையீரலுக்கு
எரிசக்தி அனுப்பும் தொழிற்சாலை!

கரியமில துச்சாதனன்
துகிலுரிக்காமல்
காற்றின் கற்பை
காக்கும் காவலன்

நம்மை
ஈன்ற கை ஊட்டியது ஓராண்டு
இயற்கை ஊட்டுவது நூறாண்டு
அந்த தாயவளின் தலைமழித்து
தேவையில்லை இக்காடு
காப்பி, தேயிலையால் முக்காடு
இது
புலி சிறுத்தை கரடியுடன் வாரணம்
ஊருக்குள் ஓடிவரக் காரணம்

எங்கும் வீடு எழுந்து
வீதி நிறைந்து
கானகம் குறைந்து போகுதே?

இனி-
காகமும் நடந்தே போகுமோ?
அது
வாழ வளையும் தோண்டுமோ?

இட ஒதுக்கீடு இவைகளுக்கில்லையா?
இலவச நிலம் பெற சுதேசிகளில்லையா?
வேறு தேசத்தில் விலை இவை போவதால்
பணக்கார பட்டியலில்
பறவையும் விலங்கும்?
எண்ணிப்பார்த்தால்
இன்றைய மக்கள் தொகையை விட
மரங்களின் தொகை குறைவு

இனி

மரமே நமது மதம்
இதனை வளர்க்க
தீவிரவாதிகள் இப்போது தேவை!

கே. ஜெயக்குமார், கூடலூர்

JOBS! JOBS! JOBS!

TEMP EMPLOYMENT AGENCY



- General Labor
- Packers
- Machine operator
- Forklift operator

NOW HIRING

Note: Must be able to lift heavy packages

Tel: 416-292-2929 Fax: 416-292-9857 OR

80 Nashdene Rd. Building - D Unit 89
Scarborough ON. M1V 5E4

## BASEMENT FOR RENT

**MIDDLEFIELD & FINCH**
2 bedroom Bsmt for rent. Sep. entrance, parking. Avail.Immediately.
தொடர்புகளுக்கு: **(647)-609-5590**

**MARKHAM &14Th AVE.**
2 Bedroom new bsmt for rent. Sep.entrance, parking. Female student or family preferred. Close to Bus. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.829.3212**

**TAPSCOTT & MCLEVIN**
1 bedroom bsmt for rent. Sep. Entrance, Parking. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.998.3535**

**MARKHAM & DENISON**
1 Bedroom bsmt for rent. Sep.entrance, parking. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.770.2881**

**MORNINGSIDE & SHEPPARD**
2 Bedroom furnished bsmt for rent. close to Uof T & 24 hour bus services. No pets or no smoke. Small family preferred.
**(647)-833-3893 or (647)-852-4207**

**NEILSON & MCLEVIN**
1 bedroom bsmt for rent. Sep entrance. Parking, laundry. Available immediately.
தொடர்புகளுக்கு: **437.992.4869**

**MORNINGSIDE & MCNICOLL**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, 1 parking. Close to all facilities. Couple preferred. Avail. Immediately.
தொடர்புகளுக்கு: **416-613-1792**

**MARKHAM & ELSON**
2 Bedrooms & 1 bedroom walkout bsmt for rent. Sep. laundry. Close to all facilities. No smoking, no pets & no drinking.
தொடர்புகளுக்கு: **647.402.2745**

**MARKHAM & DENISON**
3 Bedrooms & 2 washroom bsmt for rent. Close to all facilities. Avail. Immediately.
தொடர்புகளுக்கு: **647.703.3254**

**MORNINGSIDE & OLDFINCH**
2 bedrooms bsmt for rent. 1 parking, laundry. Close to all facilities. Available immediately.
தொடர்புகளுக்கு: **416.836.7894**

**MORNINGSIDE & ELLESMERE**
2 bedroom bsmt for rent. 1 parking. Only for Pentecost christians. Close to all facilities. Available immediately.
**Contact: 647.656.9050**

**MARKHAM & STEELES**
3-bedroom newly renovated bsmt for rent. Students are welcome. Avail. September 01, 2020.
**647.505.2582 / 905.471.2582**

மேலும் பக்கங்கள் 15, 16

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & MCNICOLL**
2-bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, school. Couple couple preferred
தொடர்புகளுக்கு: **416-258.3256**

**NEILSON & MCLIVEN**
2 bedroom & 1washroom Bsmt for rent. No smoke or no drinkor no pets.Couple or single preferred. Avail.Immediately.
தொடர்புகளுக்கு: **(647)-347-0752**

**MARKHAM & STEELES**
2 Bedroom and 1 Bedroom Basement Apartment. Sep.Entrance, Close to all Facilities. Available Immediately.
**Contact: 647.280.9385**

**MARKHAM & PAINTED POST**
3 Bedroom+1 washroombsmt for rent. Sept. Entrance. Close to all facilities. Avail. September 01, 2020.
தொடர்புகளுக்கு: **416.434.0082**

**MARKHAM & DENISON**
2 bedroom+1 washroom bsmt for rent. Close to school & YRT, Bus. Available immediately.
தொடர்புகளுக்கு: **647-686.8590**

**MORNINGSIDE & SHEPPARD**
1 bedroom+1 washroom bsmt for rent. Sep. Entrance, Sep. Close to school , shopping, transit & HWY 401.
தொடர்புகளுக்கு: **416.473.3052**

**MORNINGSIDE & FINCH**
1 bedroom+1 washroom bsmt for rent. 1 parking. Close to all facilities & UTSC within 10 minutes bus trip.
தொடர்புகளுக்கு **416.455.5546**

**STAINES & STEELES**
2 bedroom brand new bsmt for rent. Sep entrance. Close to all facilities. Avail. Immediately.
**Call or text: 647-893-6491**

**MCCOWAN & STEELES**
1 bedroom Bsmt for Rent. Sep. Entrance, Close to school, 5 min. walk to TTC& more. Avail. September.
தொடர்புகளுக்கு: **519.860.6985**

**MCCOWAN & STEELES**
2 bedroom Bsmt for rent. Laundry. Close to high school, Walmart, NoFrills. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.523.1312**

**BRIMLEY & EGLINTON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance. Working Female or student preferred. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.238.9061**

## BASEMENT FOR RENT

**MIDDLEFIELD & STEELES**
2 bedrooms bsmt for rent. Sep. entrance, wifi, laundry. 5min walking distance to Middlefield bus loop, etc. 4 or 5 student can share. All furnished. Avail. September 01, 2020.
Please call : **416.388.2401**

## ROOM FOR RENT

**MCCOWAN & FINCH**
Masterbed room on a condominium. Washroom inside the room. Shared kitchen & laundry. Renting for female only
தொடர்புகளுக்கு: **647.677.9369**

**MCCOWAN & EGLINTON**
1 bedroom for rent in a detached house. Only female. Rent $700 ( Utilities included and Parking lot will be provided)
Call **437.235.6130**

**9Th LINE &14Th AVE.**
(Legacy Neighborhood)
YRT stop in front of the house
Parking and Amenities included
**Call (416) 648-1987 or (416) 669-3549**

**MARKHAM & ELLESMERE**
Room for rent in bangalow house main floor. Close to all facilities. All included wifi and parking. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.996.6977**

## BASEMENT FOR RENT

**MORNINGVIEW TRAIL & OLD FINCH**
2 Bedroom & 2 Washroom bsmt for rent. Separate Entrance & Separate Laundry. Near School ,Park 2 minute work TTC & daycare. Priority family or Couples. Avail. immediately.
**Suthan: 416.473.4200**

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & SHEPPARD**
3 bedroom basement for rent. Sep.entrance. walk out to back yard, 2 washrooms & car parking. Close to all facilities.
தொடர்புகளுக்கு: **416-509-7247**

## HOUSE / BASEMENT FOR RENT

**SUNDANCE & ELLESMERE**
3 bedroom house (mainfloor), 2 bedroom bsmt for rent. bsmt have sep.Entrance. Close to all facilities.
தொடர்புகளுக்கு: **647-998-0181.**

## BASEMENT FOR RENT

**BRIMLEY & LAWRENCE**
2 bedroom bsmt for rent.
or Rooms are available in
**MORNINGSIDE & LAWRENCE**
Close to all facilities.
Close to main road.
தொடர்புகளுக்கு: **365.338.3406**

## BASEMENT FOR RENT

**NEILSON & MCLEVIN AVE.**
1 Bedroom basement for rent. Sep.entrance.Near all amenities. Available immediately.
Please call - **Sri 647.534.5617**

## HOUSE FOR RENT

**MCCOWAN & EGLINTON**
3 Bedroom house for rent. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.201.1222**

**NEILSON & ELLESMERE**
3 bedroom bungalow (main floor) house for rent. No pets or No smoking. Close TTC, school, hospital. Avail. Immediately.
**Call or text: 416-477-8746**

**MARKHAM & SHEPPARD**
2 bedroom+2 washroom town house for rent. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.471.7222**

## RENT/LEASE

**BASEMENT FOR RENT:**
**MARKHAM RD/ DENISON/STEELES**
Bright & Spacious 2 Bedroom Bsmt Apartment With Sep. Entrance. Ensuite Laundry & One Car Parking Included .

**HOUSE FOR RENT :** Short Term Rental From Sep/01/2020 - April-2021
Location : Markham & Lawrence
3 Bedroom House : Parking included :
Call for details

**LEASE:** Markham Rd/ Denison :
1 bedroom self contained Basement Apt: Furnished. Sep.Entrance. Single Person : Vegetarian Preferred.
Suthan Namasivayam: **647-988-3866**

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & MCNICOLL**
2bedrooms bsmt for rent with 1full & 1half washrooms,living room & kitchen. Sep.entrance, 1parking. Close to 24 hrs bus and all facilities. No pets no smoking.
Call or text: **647.688.1910**

## BASEMENT FOR RENT

**14TH AVENUE & 9TH LINE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, Laundry. Close to elementary school, park & bus.Avail. immediately.
**416.904.7531 / 416.558.4929**

## BASEMENT FOR RENT

**BELLAMY & LAWRENCE**
3 bedroom Basement for rent. separate entrance, car parking, laundry, Internet. Close to all facilities. Avail. Immediately.
**647.920.3019 / 647.781.3019**

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை 5 நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

## CONDO FOR RENT

**DONMILLS & SHEPPARD**
2 Bedroom/2 Full Bathroom
Parking Available.
Move in: September 15, 2020
Call: **647-667-0482 or 416-889-3191**

---

**MARKHAM & DENISON**
3 bedrooms, 2 full washrooms condo for rent. parking, 1 storage room. Close to all facilities. Avail. September 01, 2020.
Jothy **647.505.2582 / 905.471.2582**

## BASEMENT FOR RENT

**MARKHAM & ELLESEMERE**
3 bedroom basement for rent. Close to all facilities. Avail. immediately.
**Phone #: 437-239-4596**
**Secondary #: 647-920-2185**

## BASEMENT FOR RENT

**BRIMLEY & LAWRENCE**
3 bedroom 1 washroom basement for rent. Sep.entrance shared laundry, 1 parking close to SP importers,Donwood park jr public school,ect
Avail. immediately.
**Phone :647.709.3494**

## BASEMENT FOR RENT

**MARKHAM & ELLESMERE**
2 Room Bsmt for rent. Sep. entrance. hwy 401 -3km, 24 hours bus service, scarborough town center (10 mins), mornings side university (8 mins), centennial college (5 mins). Student or couples preferred. Avil. Immediately.
தொடர்புகளுக்கு: **416.566.1918**

## ROOM FOR RENT

**MARKHAM & ELLESEMERE**
One bed room for rent in 2 bed rooms appartment. Only a single male living in the other room Preferably for a single male student or full time working person. No smoking .
Contact:**416.732.2228**

## ROOM FOR RENT

**NEILSON & MCLEVIN**
1 bedroom for rent. Separate Bathroom. Shared kitchen. Looking for a senior female 50+. Opposite Malvern Mall. Steps to TTC, grocery & medical. $650/mth.
தொடர்புகளுக்கு: **647-568-3091**

## வீடு வாடகைக்குபெற்றிட/கொடுத்திட

வாடகைக்கு வீடுகள், Condo., Bsmts போன்றவற்றை Scarborough, Markham, Mississauga, Brampton, Ajax பகுதிகளில் பெற்றிட
அழையுங்கள்: **647.402.2937**

## HOUSE/BASEMENT FOR RENT

**STEELES & BRIMLEY**
1) 1 bedroom basement for rent.
3 bedrooms +2washrooms house for rent In **SCARBOROUGH** area.
தொடர்புகளுக்கு: **647.686.8590**

## ROOM WANTED

I am looking for a room suitable for one male who is vegetarian.
**You can contact:**
**647-740-7623/416-318-4844.**

## ROOM FOR RENT

**MARKHAM & EGLINTON**
Room in a beautiful condo. with a big bathroom & closet on the main floor at next to the Metro food Store for a monthly fee of $1000
Please call Shiva **416.433.0491**

## HOUSE FOR RENT

**MCCOWAN & FINCH**
3 bedroom 2 full washroom 2 storey semi-detached house for rent. No pets are allowed and no smoking within the property. Scarborough Town Centre only a 15 minute TTC Bus ride away.
தொடர்புகளுக்கு: **437-247-3935**

## HOUSE FOR RENT

**KENNEDY & EGLINTON**
A beautiful bungalow house with 3 bedrooms + den &1 washroom for rent and a parking spot. The house is a close walk to schools & Kennedy station as well as multiple grocery stores & restaurants.
**647.869.3509 / 416.271.2377**

## HOUSE FOR RENT

**KENNEDY & LAWRENCE**
3 bedrooms, one full washroom, 1 power washroom & all the amenities. Close to school shopping ttc & etc. Laundry & parking. 3 bedrooms upstairs it's bungalow. Avail. Immediately.
**289.244.8555 /647.927.5541**

## HOUSE FOR SALE

House for Sale
GTA Area
Convenient location
**Please contact for further details:**
**416.648.7283**

## HOUSE FOR SALE

**SCARBOROUGH**
**KENNEDY & HWY 401**
3 Bedroom condo apartment with one parking & very low maintenance fee for sale $299,900.00

**AJAX**
**HARWOOD & DREYER**
2 storey, 3 Bedroom, 2 bathroom Condo town house with part finished basement & attached car garage for sale $389, 900.00

**416.917.0557**
**Rajah Masillamany**
**(HomeLife / Future Realty Inc.)**

## SALE / RENT

**MARKHAM & SHEPPARD**
4 bedroom & 3 washroom house for **Sale.**

**NEILSON & SHEPPARD**
2 bedroom & 2wasroom Houses for **Rent.**
Kannan Kankesu: **416.834.4200**

## CAR FOR SALE

Used car for sale
2018 rebuilt Honda
Sisley 38795 very low km
தொடர்புகளுக்கு:
**416.303.2785**

## வேலைக்கு ஆட்கள் தேவை

Scarborough வில் அமைந்திருக்கும் **Pizza Pizza** விற்கு அனுபம் மற்றும், முழுப்பொறுப்புள்ள **Pizza maker** தேவை.
அனுபவத்தைப் பொறுத்து சம்பளம் வழங்கப்படும்
Contact: **647.221.3770**

## உடனடி வாடகைக்கு விற்பனைக்கு

**வீடுகள், கொண்டோக்கள் விற்க, வாங்க வாடகைக்கு விட வாடகைக்கு பெற்றுக்கொள்ள அழையுங்கள் Jey - 416.816.9011**

## HOUSE FOR SALE - வீடு விற்பனைக்கு

**இணுவில் - சுண்ணாகம்**
**இணுவில்** K.K.S. **வீதிக்கு அருகில் உள்ள** 2½ **பரப்பு காணியுடன் சகல வசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு.**
**மேலதிக விபரங்களுக்கு:** Phone:**1-585-413-0543** ( U.S.A.)
email: ***sajibaba2010@gmail.com***

## JUNK REMOVAL

பழைய இரும்பு பொருட்கள், **Electronics** பொருட்கள் வீசுவதற்காக வைத்திருந்தால் இலவசமாக எடுக்கப்படும்.
**MOVING / DELIVERY AVAILABLE.**
தொடர்புகளுக்கு: **பிறேம்-647.835.5244**

## AZ DRIVERS WANTED

Amero Logistics Inc. is currently hiring experienced AZ drivers for Toronto to Montreal run. Also AZ city drivers for local work in GTA.
Need 1-year experience and clean CVOR and abstract. Weekly Pay .
For more info call : **647.274.0300**

மேலும் பக்கங்கள் 14, 16

## ஸ்ரீசாயி திருமண சேவை

உங்கள் பிள்ளைகளுக்கு பொருத்தமான வாழ்க்கைத் துணையை தேடிக்கொள்ள எங்கள் சேவையை நாடுங்கள். பல துறைகளில் தகுதி பெற்ற மணமகன், மணமகள் உள்ளனர்.
**416.890.6497**
**srisai2912@hotmail.com**

## TAILORING

**SCARBOROUGH**இல்
Saree Blouses $25க்கு
தைத்துக் கொடுக்கப்படும்.
**V G Tailors:**
**647.621.3694**

## ஆலய முகாமையாளர் தேவை

றொறொன்ரோவில் உள்ள பிரசித்தி பெற்ற இந்து ஆலயம் ஒன்றிற்கு ஆலய முகாமையாளர் (Manager) தேவை. தமிழிலும், ஆங்கிலத்திலும் எழுத, வாசிக்க, பேசத் தெரிந்திருக்க வேண்டும். இருப்பிட வசதி வழங்கப்படும். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்புகளுக்கு: **647-762-5804**

## திருமணசேவை

திருமண
சேவைக்கு
தொடர்பு கொள்ளவும்
**905.607.3896**

வீடு, அறை, நிலஅறை (**BSMT**), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை 5 நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

**OFFICE SPACE FOR RENT**

**MIDDLEFIELD & FINCH**

Avail. immediately.

தொடர்புகளுக்கு:

**647.296.7932**

**வாடகைக்கு**

4 BR, 3 BR, 2 BR, 1 BR
House, Condo, Basement
வாடகைக்கு உள்ளது
அழையுங்கள்.

**647.861.8240**


மேலும் பக்கங்கள் 14, 15


**MATH TUTORING**

Canadian female college professor currently teaching Math online for Grade 6, 7, 8, and 9

Free first lesson. Contact: **289.988.9202**

**ajaxprivatetutor@gmail.com**

**HELP WANTED**

"Looking for experience serious, Line cook Chef, kitchen helper, dishwasher has availability 7 days full time or part time". Address: AFFY's PREMIUM GRILL 55 Lebovic Ave C101 Scarborough

Contact: **647-290-6992**


மற்றவர்களுக்கு பாவம் பார்த்தே நம்மில் பலர் பாவமான நிலைக்கு தள்ளப்படுகிறோம்.


**USED VEHICLES WANTED**

LEXUS HONDA ACURA TOYOTA



• Any Km • Any condition

We pay upto $1000

Please call:

**437.688.6305**


# உங்களில் முதலீடு செய்வது

**Words of Peace**

பிறேம் ராவத் பற்றி மேலும் அறிந்து கொள்ள:
416 431 5000 தமிழ்
**Timelesstoday .com**

## Investing in yourself

நான் மானுடர் என்ற ரீதியில் உங்களின் உள்ளத்தில் தோன்றும் ஒரு ஆனந்தத்தைப் பற்றிப் பேசுகிறேன் - உங்கள் வாழ்வில் ஒரு நிலை வரும்போது வாழ்வில் நடைபெறும் விடயங்களால் அல்லாமல் உங்கள் உயிர் வாழ்வையே அனுபவிக்க ஆரம்பிப்பீர்கள்".

நீங்கள் வாழ்நாள் முழுவதும் உங்கள் கல்வி, பொழுதுபோக்கு, தொழில் மற்றும் சமூக வாழ்வு என்பவற்றில் முதலீடு செய்துள்ளீர்கள். உங்களுக்கு ஆனந்தம் தேவையாயின் - நீங்கள் உங்களிலேயே முதலீடு செய்யவேண்டும்.

நாம் விதைகளைப் பற்றிப் பேசப் போகின்றோம். புரிந்து கொள்ளவேண்டிய ஒரு விடயம் என்னவென்றால் நீங்கள் ஒவ்வொருவரும் வேலை செய்கிறீர்கள். ஆரம்பத்தில் நீங்கள் விளையாட்டில் ஈடுபட்டீர்கள். இதற்கு உங்களுக்கு விளையாட்டுப் பொருட்கள் தேவைப்பட்டன. உங்கள் பெற்றோர் உங்களுக்கு விளையாட்டுப் பொருட்களை வாங்கித் தந்திருப்பர். உங்கள் விருப்பத்திற்கு அதிகமாகவே உங்களிடம் விளையாட்டுப் பொருட்கள் இருந்திருக்கலாம். ஆனால் நீங்கள் சந்தோசமாக இருப்பதற்கு நீங்கள் விளையாட வேண்டும்.

பின்னர் நீங்கள் பாடசாலை செல்ல ஆரம்பித்தீர்கள். அத்துடன் உங்கள் கல்வியில் முதலீடு செய்தீர்கள். உங்கள் பெற்றோர் முதலீடு செய்தனர், ஆனால் நீங்களும் முதலீடு செய்தீர்கள். நீங்கள் ஒவ்வொரு நாளும் போக வேண்டும், உங்கள் வீட்டுப்பாடங்களை எடுத்துச் செல்ல வேண்டும், இவற்றை எல்லாம் நீங்கள் செய்யவேண்டும். ஆகவே நீங்கள் கல்வியில் முதலீடு செய்தீர்கள்.

அதன்பின்னர் நீங்கள் வெளியே சென்று வேலை தேடுவதில் முதலீடு செய்தீர்கள். அதன்பின்னர் ஒவ்வொரு நாளும் தொழில் ஒன்றினால் நீங்கள் பெறும் நிதி வளத்தை, தொழில் இருப்பதனால் கிடைக்கும் நிதி வளத்தை அந்த முதலீட்டில் கவனம் செலுத்துவதில் முதலீடு செய்கிறீர்கள். நீங்கள் வீட்டுக்கு வருகிறீர்கள்: நீங்கள் பணம் கொண்டு வருகிறீர்கள், நீங்கள் அதை எதிலோ முதலீடு செய்கிறீர்கள். ஆனால் நீங்கள் ஏதோ ஒரு வழியில் முதலீடு செய்யப்பட்டு இருக்கிறீர்கள்.

உங்கள் வாழ்வு எப்படியோ அது அப்படியேதான் உள்ளது. ஆனால் பணம் புரள்வதற்கு உங்களுக்க அந்த வேலை வேண்டும் என்பது உங்களுக்குத் தெரியும். ஆகவே உங்களை ஒவ்வொரு நாளும் நீங்கள் முதலீடு செய்கிறீர்கள். காலையில் எழுவது, வேலைக்குச் செல்வது, அதில் கவனம் செலுத்துவது, உங்களால் இயலுமானவரை நன்கு செயற்படுத்துவது, அது தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

ஆகவே இங்கு விடயம் என்னவென்றால் நீங்கள் முதலீடு செய்யவேண்டும். உங்கள் தொழிலில்-உங்கள் நண்பர்களில். நல்லது, உங்கள் நண்பர்களுடனும் அப்படித்தான். உங்கள் நண்பர்களின் தொலைபேசி உரையாடல்களில் செலவுசெய்யும் நேரம். உங்கள் முதலீடு-அது உங்களின் முதலீடு. உங்கள் சக்தியை நீங்கள் முதலீடு செய்தால் என்ன? நீங்கள் முதலீடு செய்வது நேரமாக இருக்கலாம், நீங்கள் முதலீடு செய்யும் நேரமும் சக்தியும்-நீங்கள் முதலீடு செய்வது.

ஆம், ஒரு வழியில் நாம் இங்கு அமைதியைப் பற்றிப் பேசுவதற்காக வந்துள்ளோம். நாம் இங்கு இந்தப் பாலைவனம் மலர்வதற்கான சாத்தியம் பற்றிப் பேச இருக்கிறோம். அப்படியல்லவா? அமைதியில் நீங்கள் எவ்விதம் முதலீடு செய்துள்ளீர்கள். எப்படியானதொரு முதலீட்டை நீங்கள் செய்திருக்கிறீர்கள்.? ஒவ்வொரு நாளும்?

உங்கள் வாழ்வில் உங்களுக்குத் தெளிவு தேவையல்லவா? தெளிவில் நீங்கள் எந்தளவு முதலீடு செய்துள்ளீர்கள். ஆனந்தம் உங்கள் வாழ்வில் தேவையல்லவா? ஆனந்தத்தில் நீங்கள் எந்தளவிற்கு முதலீடு செய்துள்ளீர்கள். உங்கள் வாழ்வில் நீங்கள் புரிந்துணர்வை விரும்புகிறீர்கள். உங்கள் வாழ்வில் புரிந்துணர்விற்காக நீங்கள் எவ்வளவு முதலீடு செய்துள்ளீர்கள்? உங்களை அறிந்துகொள்ள நீங்கள் விரும்புகிறீர்கள். உங்களை அறிந்து கொள்வதில் நீங்கள் எவ்வளவு முதலீடு செய்துள்ளீர்கள்.

நீங்கள் எவ்விதம் முதலீடு செய்கிறீர்கள்? உங்கள் வாழ்வில் சிறிதளவு அமைதியை, சிறிதளவு ஆனந்தத்தை, உண்மையான ஆனந்தத்தைக் கொண்டுவர நீங்கள் என்ன செய்திருக்கிறீர்கள்.

விளம்பரங்களில் காட்டுவது போல நீங்கள் நண்பர்களுடன் சில நிமிடங்கள் சென்று வைன் அல்லது பியர் அருந்துவதோடு அவர்கள் காட்டுவதைப் பார்ப்பதனால் வரும் ஆனந்தம் அல்ல. அவர்கள் பியர் குடித்துவிட்டு அதைவிட இது எந்தளவிலும் சிறந்தது அல்ல எனக் கூறுவர். அதன்பின் எல்லோரும் குடிவெறியில் இருந்து விழித்தெழுவர்.

(தொடர்ச்சி 20ஆம் பக்கம்...)

# முதலீட்டாளர்களே! நீங்கள் ஓய்வெடுங்கள்!!

## உங்கள் வீட்டை வாடகைக்கு கொடுத்து பராமரிக்கும் வேலையை நாங்கள் செய்து தருவோம்!!

**எமது சேவைகள்:**

- வீட்டின் சரியான வாடகையைத் தீர்மானிப்பது.
- வீட்டைச் சந்தைப்படுத்தி அதை விசாரிப்பவர்களுக்கு மேலும் தகவல் தருவது.
- தகுதியான வாடகையாளர்களை கூட்டிச் சென்று வீட்டைக் காட்டுவது.
- வாடகைக்குப் பெற விரும்புவோரின் வேலை வருமானம், நம்பகத்தன்மை என்பவற்றை உறுதி செய்து கொள்ளுதல்.
- தகுதியான வாடகையாளருடன் வாடகை ஒப்பந்தத்தை செய்து கொள்ளுதல்.
- வாடகையாளர் குடியேற முன்னரும் பின்னரும் வீட்டின் நிலையை கவனித்துக்கொள்ளுதல்.
- சரியான திகதியில் வாடகைப்பணத்தை அறவிட்டு வீட்டுரிமையாளரின் வங்கிக்கணக்கில் வைப்பிலிடுதல்.
- பிரச்சனை தரும் வாடகையாளர்களை வெளியேற்றும் முயற்சியில் ஈடுபடல்.
- வீட்டில் திருத்த வேலைகள் தேவைப்படும் போது அதில் அனுபவம் வாய்ந்தவர்களை அனுப்பித் திருத்தும் முயற்சியில் ஈடுபடல்.
- வருட முடிவில் அந்த வீட்டின் வரவு செலவுக் கணக்கை உரிமையாளர்களுக்கு ஒப்புவித்தல்.
- வாடகை ஒப்பந்தத்தை புதுப்பித்தல்.
- வருடாந்த வாடகை அதிகரிப்பை அறிவித்தல்.
- வீட்டின் பெறுமதியில் ஏற்ற இறக்கத்தை அறிவித்தல்.
- திரும்பவும் வீடு உங்களுக்குத் தேவைப்படும் போதுசரியான வழிமுறை களைக் கையாண்டு பெற்றுத்தரல்.
- வாடகைக்கு விடக்கூடிய குறைந்த விலையிலுள்ள வீடுகளை கண்டுபிடித்து வாங்க உதவி செய்தல்.
- வாடகைக்கு விடுவதற்கு வீட்டில் என்ன திருத்த வேலைகள் அவசியம் என்று அறிவுரை வழங்குதல்.

***You can relax while we take care of your investment property!***

**WATSON**
PROPERTY
MANAGEMENT LTD

**Direct: 416-284-9999**
WatsonPM1989@gmail.com
80 Corporate Drive, Unit 207
Scarborough, ON, M1H 3G5



**Karu Kandiah** Director
30+ Years in Real Estate

# Property Management

| | |
|---|---|
| * **Markham - Markham / Major Mackenzie – Bsmt** (2 Brm + 1Bath) Great Location. Completely Renovated. Close To Ttc, Hwy 407, Schools, Hospital, Go transit. 1 Parking **[Asking $1600/m]** | * ***Brock*** **– Simcoe St / Mara St – Detached** (4 Brm + 3 Bath) Brand New Home. Double Garage. Walking Distance To Park & School **[Asking $2000/m]** |
| * **Markham – Markham / Major Mackenzie – Bsmt** (1 Brm + 1 Bath) High Demand Area. Completely Renovated. Close To Ttc, Hwy 407, Schools, Hospital, Go transit **[Asking each- $1200/m]** | * ***Toronto*** **– Bloor / Spadina – Condo Apt** (1 Brm + 1 Bath) 24 Hr Concierge Demand Location. Walk To U Of T Campus, Ttc, Gym, Excellent Recreational Facilities. **[Asking $1950 /m]** |
| * ***Scarborough*** **– Ellesmere Rd / Military trail – Bsmt** 1 Room Available for Students Or Professional. Near U Of T Scarborough / Centennial College. Close to Ttc & Hwy 401. **[Asking each- $550/m]** | * ***Toronto*** **- Danforth Ave & Main St- Townhouse** (1+1Brm+1Bath) Apartment For Rent On Danforth Ave And Main St Above Storefront. Walking Distance To Main St Ttc Subway Station**[Asking $2100 /m]** |
| * ***Scarborough*** **– Pharmacy Ave / Ellesmere Rd– Bsmt** (2 Brm + 1 Bath) Renovated 2 Bedroom, Bathroom Basement **[Asking each- $1900/m]** | * ***Oshawa*** **- Harmony Rd / Greenhill Ave - Detached -Full House** (5 Brm + 4 Bath) 1 Year Old House. Walking Distance To Schools, Parks And Shopping Plaza's . 6 Parking Spaces. **[Asking $3200 /m]** |
| * ***Scarborough*** **– Midland / S Of Lawrence – Detached –Main Floor** (4 Brm + 2 Bath) **Huge Corner** Lot With Attached Garage. Available Immediately. **[Asking each- $2800/m]** | * ***Milton*** **-Thompson & Louis St. Laurent -Townhouse** (3 Brm + 3Bath) Brand New,Never Lived In, Close To All Amenities, Shopping, Schools, Parks, Trails.Easy Access To Highway.**[Asking $2600 /m]** |

➡ வீடு ஒன்றை வாங்கி வாடகைக்கு விட்டு நல்ல வருமானம் தேட விரும்புகிறீர்களா? அல்லது

➡ ஏற்கனவே நீங்கள் வாடகைக்கு விட்டிருக்கும் வீட்டில் வாடகைப் பிரச்சனைகளின் நிர்வாகப் பொறுப்பை ஒப்படைக்க நம்பிக்கையான நிறுவனத்தைத் தேடுகிறீர்களா?

➡ நீங்கள் ஏற்கனவே வாழ்ந்துவரும் சொந்த வீட்டிலிருந்தே கடனை எடுத்து வீட்டை வாங்கும் தகுதி உங்களுக்கு இருக்கலாம்.

இத்துறையில் எனது 32 வருட அனுபவமும் எமது (WPM) Property Managemant நிர்வாகமும்
இதை உங்களுக்கு திருப்திகரமாக செய்து தரும் என்பதை முழுதாக நம்பலாம்.


**நம்பிக்கையுடன் அழையுங்கள்: கரு கந்தையா 416.616.7278**

**MANAGING RESIDENTIAL PROPERTIES**
**Watsonpm1989@gmail.com**

# ஆழியவளை

**தொடர் கட்டுரை**

**யாழ்ப்பாணத்துக் கடலோரக் கிராமம் ஒன்றின் மரபும் மாற்றமும்**



கந்தசாமி முத்துராஜா

## 3. ஏனைய செயற்பாடுகள்

### அ. முயல் வேட்டை

கிராமத்து மக்களின் மாரிகாலத்தின் உணவுத்தேவையைப் பொறுத்துத் தற்காலிகமாக இந்த வேட்டைத்தொழில் நடைபெறும். அடைமழை பெய்யும் மாரிகாலத்தில் மக்கள் பெருங்கடல் சிறுகடலில் மீன்பிடிக்கப் போவதற்கு இயலாமல் இருக்கும். அந்த நேரங்களில் கறி சமைப்பதற்கு மாமிசம் கிடைப்பது அரிது. எனவே இந்தக் கறிப் பஞ்சத்தைத் தீர்ப்பதற்காகவே வேட்டையாடுவர். ஆண்கள் குழுக் குழுவாகச் சேர்ந்து வேட்டை நாய்களுடன் முயல் வேட்டைக் காகக் கிராமத்தின் தெற்கேயுள்ள காட்டுப்பற்றைக்குச் செல்வர்.



முயல் வேட்டையில், முயலின் காலடியைப் பார்த்துச் சத்தம் போட்டுத் தடிகளால் எறிந்து பற்றையிலிருந்து எழுப்பித் துரத்திக் கலைப்பர். நாய்களும் ஆட்களும் வியூகம் வகுத்து முயல்களை வளைத்துத் துரத்துவர். சிறிய காரைப் பற்றைகளைக் கடந்து உயரம் பாய்வது போல் வேகமாக ஓடுவர். பெரும்பாலும் நாய்கள்தான் முயலைக் கௌவிப் பிடிக்கும். சிலர் பொல்லுத் தடிகளினால் முயல், உடும்புகளை அடித்தும் வீழ்த்துவர். அனேகமாக முயலும் உடும்பும்தான் பிடிபடும். இந்த வேட்டைத் தொழில் பகல் நேரத்தில் மட்டும் நடை பெறும். குளிர் காலத்தில் பற்றைக்குள் முயல்கள் பதுங்கிக் கிடப்பதால் 'துரந்துமி' 'தூறல்' மழையின்போது, முயல்கள் கூடுதலாகப் பிடிபடுவது வழக்கம்.

### ஆ. கிணறு வெட்டுதல்

ஆழியவளைக் கிராமத்தின் நிலம் 'வெண் மணல்' படிமம் கொண்டது. நிலத்தின் கீழே ஐந்திலிருந்து பத்தடி ஆழத்தில் நந்நீர் உள்ளது. பண்டை நாட்களில் குடில் வீடுகளும், கூரை வீடுகளும் கொட்டுக்கிணறுகளும்தான் பயன்பாட்டில் இருந்தன. கோடைகாலமாகிய ஆனி ஆடிகளில் நீர்ஊற்று, நிலத்தின் அடியில் மிக ஆழத்தில் சென்று விடுவதால், அந்த மாதங்களில்தான் கிணறு வெட்டுவர். ஏறத்தாழப் பத்துப்பேர் மண்வெட்டியினால் மாலை ஆறுமணிக்குக் கிணறு வெட்டத் தொடங்கினால் நள்ளிரவுக்கு முன் பின்னாகக் கிடங்கில் தண்ணீர் ஊறுகின்ற ஈரமண்ணைக் கண்டுவிடுவர். இம்முயற்சி, சரீர உதவியாகச் செய்யப்படுவது. வெட்டுவோருக்குக் கள்ளும் சோறும் கொடுப்பர். இதைக் 'கிணற்று வெட்டுச்சோறு' என்று அழைப்பர். கிணறு வெட்டப்படும் அன்றிரவு, வீட்டில் ஒரு சிறிய கொண்டாட்டம் போல நடைபெறும். நெருங்கிய உறவுக்காரருக்கும் கிணற்று வெட்டுச் சோறு கொடுத்தனுப்புவர்.

கிடங்கினுள் கிணறு அமைப்பதற்காகச் சற்றுப்பெருத்த அடிப்பாகத்தையுடைய பனையைத்தறிப்பர். சுமார் நான்கு அடி நீளமாக, அடிப்பனையைத் துண்டு போடுவர். அத்துண்டுகளின் நடுப்பகுதிச் சோத்தியைக் (மென்மையான பாகம்) கோடரியினால் குடைந்தெடுப்பர். குடைந்த கோதறையுள் (மெல்லிய உடலுள்ள ஒருவர் உப்புகக்கூடிய துவாரமுள்ளது) ஐந்து அல்லது ஆறு கொட்டுகளை, வெட்டப்பட்ட கிடங்கினுள், கிணற்றின் ஆழத்துக்கு ஏற்றவாறு ஒன்றன் மேல் ஒன்றாகச்செருகி அடுக்குவார். இவற்றைச் சுற்றி, வெட்டிக்குவித்த மண்ணை அணைத்துவிடுவர். கிணற்றின் ஆழத்துக் கேற்ப கயிறு தொடுக்கப்பட்ட வாளியி னால், நீரை அள்ளிக் குடிப்பதற்கும் குளிப்பதற்கும் ஏனைய பயன்பாடுகளுக் கும் பயன்படுத்துவர். இதைக் கொட்டுக் கிணறு என்று அழைப்பர். இன்றும் வறிய மக்கள் சிலரின் வளவுகளில் கொட்டுக் கிணற்றைக் காணலாம். இதன் அமைப்பு நெறி மரபு வழிப்பட்டது. கொட்டுக்கிணறு அமைக்கும் முறை மட்டக்களப்புப் பகுதியிலும் பெரிதும் பண்டைநாள் முதலாக இருந்து வந்துள்ளது என்பர் (பாலசுந்தரம். இ. 1979: 297).

### இ. மாரிகாலச் செயற்பாடுகள்

ஐப்பசி மாதம் கரைவலை கூடு கட்டியதும் அந்த மாதத்தில் வரும் தீபாவளியை, மக்கள் சிறப்பாகக் கொண்டாடுவர். கார்த்திகை, மார்கழி மாதங்கள் உழைப்பும் வருமானமும் குறைந்த காலங்களாகும். எனவே சிலர் வலை பொத்துதல், வேலி அடைத்தல் போன்ற கூலித் தொழில்களைச் செய்வர். சிலர் வலிகாமப் பிரதேசத்துத் தோட்டக்காரருக் குப் பசளைக்காகக் காட்டில் உயிலங் குழை, பூவரசங்குழை என்பனவற்றை வெட்டிக்கொடுத்து மாரிச்சீவியத்தை ஓட்டுவர். சிலர் பெருங்கடல் வீச்சு, சிறு கடல் வீச்சு, தொடுவாய் வீச்சு, அத்தாங்கு வாருதல் போன்ற தொழில்களைச் செய்வர். உணவுக்காக ஏரல் (மட்டி) கிண்டி எடுப்பர். ஏரலைக் கிளிஞ்சல் என்றும் சொல்வர். ஏரல் என்பதற்கு 'லெக்சிக்கன்' தரும் விளக்கம்: Mussel or other Bivalve animal ; Snail. எனவே ஏரல் என்பது சிப்பிக்குள் வாழும் ஓர் உயிரி. சிப்பியை அவித்து அந்த இறைச்சியை உணவுக்குப் பயன்படுத்துவர்.

மாரி காலத்தில் தமது வீடு வளவுகளைப் பழுது பார்ப்பர். வேலிகளைச் சீர்செய்வர். சிலர் புதிதாக வேலி அடைப்பர். வீரக்கழி ஆற்றைக் கடந்து கழிக்காட்டினுள்



புகுந்து, வீடுகளுக்கான கப்புகளைத் தறித்து வருவர். வேலிகளுக்குத் தேவையான அலம்பல் வெட்டுவர். வீட்டின் கூரைகளை மழைக்கு முன்னம் வேய்ந்து முடித்துவிடுவர்.

கடல் அடையல் என்பது கடலில் இருந்து வந்து கரையோரமாக தள்ளப்பட்டிருக்கும் பொருட்கள் ஆகும். மூங்கில், மரக்குற்றி என்பன முதல் கப்பல்களிலிருந்து எறியப்பட்டு வருவன. கணவாய் ஓடு வரை பல பொருட்கள் இவ்வாறு கரையில் வந்து 'அடை' வதுண்டு. மாரி காலத்தில் பெரும்பாலும் ஆண்கள் பொழுது போக்காகக் கடற்கரையோரம் 'கடல் அடையல்' பார்த்துச்செல்வர். விளையாட்டுப் பொருட்கள், போத்தல், மூங்கில் போன்றவற்றை எடுத்துவருவர். சிலர் கணவாய் ஓடு பொறுக்கிச்சேர்த்து முஸ்லீம் வியாபாரிகளுக்குச் சில்லறைக்கு விற்பர். அடையல் பார்த்துச்செல்லும்



ஒருசிலர் 'அம்பல்' எனும் பெறுமதியான ஒருவகைச்சேர்க்கைப் பொருளைக் கண்டெடுத்து இரகசியமாகப் பட்டினம் கொண்டுசென்று விற்றுப் பணம்தேடிச் செல்வந்தரான வரலாறுகளுமுண்டு. இது அதிஷ்டலாபம் போன்ற நிகழ்வாகும். மக்கள், இறைச்சி நீக்கிய ஏரல் சிப்பிகளைச் சேகரித்துச் சுண்ணாம்பு சுடும் சீவல் தொழிலாளியான ஒருவரிடம் கொடுப்பர். அவர் பண்டமாற்றாக வெற்றிலையுடன் பயன்படுத்தும் சுண்ணாம்பு கொடுப்பார். மாரியில் வீசும் வேகக் காற்றுக்கு விழும் காவோலை களை வேலி, வீட்டுக்கூரை போன்ற தேவைகளுக்காகச் சேர்த்து வைப்பர். மாரிகாலம் உழைப்புக் குறைந்த 'ஒறுப்புக்காலம்' அடைமழை பெய்யும். ஆண்கள் பெரும்பாலும் வீடுகளில் தங்கியிருப்பர்.

மேற்கூறியவற்றை விட இப்பகுதி மக்களின் பொருளாதாரச் செயற்பாடுகளெனக் கொள்ளப்படத்தக்கவை மேலும் சில உள. அவை பற்றிய விவரம் அடுத்த இதழில் தொடரும்

# பாடவா இசைநிலவே!

பாடும் நிலவாகப் பவனிவந்தாய் பாலுவே
பாடல்தர விரைவாக வந்திடுவாய் பாலுவே
ஆடிவரும் தென்றலிலும் ஐயாவுன் குரலிருக்கு
அழகான சிரிப்புடனே பாடவா இசைநிலவே



உன்னிசை கேட்பதற்கு உலகமே காத்திருக்கு
உணர்வுடனே உந்தனிசை ஒட்டியே இருக்குதையா
செந்தமிழை உச்சரித்து சிறப்பாகப் பாடிடுவாய்
வந்திருந்து பாடுதற்கு வாபாலு விரைவாக

இளையராஜா இசைபெருக என்றுமே துணையானாய்
ஏஆர் ரகுமானின் இசைக் கோலம் உட்புகுந்தாய்
விஸ்வநாதன் இசையினிலும் வெற்றிக்கொடி பறக்கவிட்டாய்
விரைவாக ஓடிவா வெள்ளித்திரை காத்திருக்கு

ரிஎம் எஸ் பின்னாலே யார்வருவருவார் பாடவென
காத்திருக்க வைக்காமல் கலக்கலுடன் வந்துநின்றாய்
உன்வரவால் திரையிசைக்கு உத்வேகம் பிறந்ததையா
எழுந்தோடி வந்திடுவாய் எங்கள்பாலு பாடுதற்கு

சுந்தரத் தெலுங்கானாலும் சொக்கவைத்தாய் தமிழிசையை
மந்திரமாய் உந்தனிசை மயக்குதையா கடவுளையே
சொந்தமுடன் எல்லோரும் கொண்டாடும் இசைமன்னா
சுகம்பெற்று எழுந்துவர இறைவனிடம் வேண்டுகிறோம்



பாலுநீ பாடவேண்டும் பலபேரும் மகிழவேண்டும்
தாள லயத்துடனே தரவேண்டும் தமிழிசையை
வாழவைக்கும் இசைதந்தாய் வாழ்ந்திடுவாய் பாலுவையா
ஆழநிறை அன்புடனே அழைக்கின்றோம் வந்திடையா

எம். ஜெயராமசர்மா
மெல்பேண் அவுஸ்திரேலியா

யோக சோதிடம்
கிரகப்பொருத்தம் பார்த்தல் சுபமுகூர்த்தம் கணித்தல்
சாதகக் குறிப்புக் கணித்தல் பலன் பார்த்தல்
தொடர்புகளுக்கு: 416.299.8361

# தமிழர் குட்டுண்ணிக் கட்சி ஓர் உறுப்பினரின் மனக்குமுறல்

குட்டக் குட்டக் குட்டுறவனும் மடையன் குட்டு வாங்கிறவனும் மடையன் என்ற பழமொழிக்கு இலக்கணமான கட்சிதான் எங்கட கட்சி. கடந்த 70 ஆண்டு காலமாகக் குனிந்து குனிந்து குட்டுக்கள் வாங்கினோம். இலங்கை நாடாளுமன்றத்துக்கு நாயாய் அலைந்தோம். ஆட்சியில் இருந்தவர்கள் ஊற்றி மிஞ்சிய கஞ்சியை நக்கித் திரிந்தோம். ஐந்தாண்டு காலமாக சுதந்திரமான கட்சிக்குக் கொடி பிடித்தோம். அதன்பிறகு ஐந்து ஆண்டுகளுக்கு யானைக்கு முண்டு கொடுத்தோம், இப்படி மாறி மாறி முண்டு கொடுத்து, இப்போது தமிழ் மக்களை நிர்வாணமாக்கி நடுத் தெருவுக்கு கொண்டுவந்து நிறுத்தி இருக்கிறோம். 22 உறுப்பினர்களோடு ஆரம்பிச்சு, உலக்கை தேய்ந்து உளிப்பிடியான மாதிரி பத்து பேரோட நிற்கிறோம். என்றாலும் இன்னும் முண்டு கொடுக்கத் தயாராக இருக்கிறோம். ஏனென்றால் முண்டு கொடுத்து எங்களை நாங்களே வளர்த்துக் கொண்டோம். ஆனால் இப்ப இருக்கிற நிலமையில் முண்டு கொடுக்கச் சந்தர்ப்பம் இல்லை என்பது நல்லாய் விளங்குது. அவங்கள் எல்லாரும் முழிச்சு விட்டார்கள். முன்பு சொன்ன மாதிரி மோட்டு சி--------- என்று கதைச்சவை எல்லாம் இப்ப விழி பிதுங்கி நிற்கிறம். இலங்கையிலே ஆதிக் குடிகளாக வாழ்ந்த எங்களை வீட்டுக்கு வெளியாலே தூக்கி எறிந்துவிட்டு வள்ளத்தில் வந்தவன் வாலை காட்டி போட்டான். சட்டம் பேசின அப்புக்காத்துமார் எல்லாம் இப்போது கப்பைக்கட்டிப்பிடிச்சுக்கொண்டு யோசிக்கிறம். இதற்கிடையில் எட்டப்பர் எல்லாரும் எக்காளமிட்டு சிரிக்கினை. விளக்கமறியலில் உள்ளுக்கு இருந்தவன் அங்க இருந்தே விளையாட்டை காட்டி விட்டான். குற்றம் செய்து தண்டனை பெற்று மறியலில் இருந்தவன் தேர்தலில் வெண்டு நாடாளுமன்ற உறுப்பினராகி விட்டான். இதுதான் எங்கட உறுப்பினர்களின் தகைமை. இப்படி என்றால் நாடு எப்படி உருப்படும்.?

அடுத்து ஜனாதிபதியாக வருவதற்கு என்ன தகைமைகள் ஒருவருக்குத் தேவை என்று பார்ப்போம்.

1. பட்டாளத்தில் ஒரு சாதாரண போர் வீரனாகச் சேர்ந்து மற்றவனுக்கு வால் பிடித்து மேலே வரவேண்டும்.
2. நாட்டிலிருந்து வேலை இல்லை என்று வெளிநாடு போய் பெட்டிக்கடை போட வேண்டும்.
3. பின்னால் அண்ணை ஆட்சியைக் கைப் பற்ற வெளிநாட்டிலிருந்து தாய் நாட்டுக்கு வந்து பாதுகாப்பு மந்திரியாய் இருக்க வேண்டும்.
4.. அரசாங்கத்தைப் பற்றிக்கேவலமாகப் பத்திரிகையிலே எழுதுறவனை, குறை சொல்கிறவனை வெள்ளை வானிலை கொண்டுபோய் வெள்ளாவி வைக்க வேண்டும்.
5. சண்டை பிடித்தவர்களை முப்பது வருஷமாய் சமாளிக்க முடியாமல் சீனாக்காரன் காலிலை விழுந்து, நாட்டின் முக்கியமான இடங்களை 99 வருசத்துக்குக் குத்தகைக்குக் கொடுத்து போட்டு ஆயுதங்களையும் இரசாயனக் குண்டுகளையும் வாங்கிக் கொண்டு வந்து அப்பாவி தமிழ் மக்களை ஓர் இடத்தில் அடக்கி வைத்துவிட்டு குண்டு போட்டுக் கொல்ல வேண்டும்.
6. வெள்ளைக்கொடியுடன் நிராயுதபாணியாய் வருகின்ற வீரர்களை ஆமிக்காரனை வைத்துச் சுட்டுக்கொல்ல வேண்டும்.
7. பக்கத்து நாட்டில பச்சைத் தமிழர் என்று சொல்லிக்கொண்டு இருக்கிற தெலுங்குக் காரனோடை சேர்ந்து பீரங்கிகள் கொண்டு வந்து அப்பாவி மக்களைக் கொல்ல வேண்டும்.



8. அபிவிருத்திக்காக வெளிநாட்டில் இருந்து வருகின்ற பணத்தில முக்கால் வாசியை பைக்குள்ள போட்டுட்டுக் கால் வாசிக்கு ரோட்டுப்போட்டு தார் ஊத்தி மூட வேண்டும்.
9. அண்மையில் நடந்த தேர்தலுக்கு சீனாக் காரன் கொடுத்த காசை அடியாட்கள் மூலமாக மக்களுக்குக் கொடுத்துப் பெரும் பான்மை வாக்குகளை பெற்றுத் தம்பட்டம் அடித்துக்கொண்டு திரிய வேணும்.
10. இன அழிப்பு, போர்க்கால அத்து மீறல்கள் மனிதாபிமானமற்ற அட்டூழியங்கள் எனப் பல்வேறு வழக்குகள் சர்வதேச நீதி மன்றத்தில் இருந்தாலும் அதை தடுக்குறதுக்கு சீனாவையும் ரஷ்யாவையும் கைக்குள் வைத்துக்கொண்டு சிவப்பு சட்டை சால்வை போட்டுக்கொண்டு வெள்ளை வேட்டியோடு நல்ல மனிதராகத் திரிய வேணும்.
11. குடும்பத்துல இருக்குற புள்ளகுட்டி, அண்ணன் தம்பி, மாமன் மச்சான் எல்லாருக்கும் மந்திரி பதவி கொடுக்க வேண்டும். வால்பிடித்தவர்களுக்கு அரை மந்திரி பதவி கொடுக்க வேண்டும்.
12. நாடு குட்டிச்சுவர் ஆனாலும் பரவாயில்லை நாங்கள் குடியும் குட்டிகளுமாய் மொட்டைகளையும் கவனித்துக்கொண்டு புத்தரை புத்துக்குள்ள அடைத்து வைத்து விட்டு, உண்மையான பக்தர்களாகப் பவனி வர வேண்டும்.
13. குருக்கள் குசுவினால் குற்றமில்லை மற்றவன் குசுவினால் குற்றம் என்று எதிர்க்கட்சியிலை முன்பு மந்திரியாய் இருந்தவர்கள் ஊழல் செய்தார்கள் என்று குற்றம் சாட்டி விசாரணைக்குக் கூப்பிட வேண்டும். இதில் ஓரிரு குட்டணுக்காரரும் இருக்கினை.

இப்படி பல விஷயங்கள் எங்கள் தாய் நாடுத் திருவிழாவிலை நடக்குது. கேக்குறதுக்கு ஆட்கள் இல்லை. புத்தரும் இல்லை போதித்தவரும் இல்லை. தமிழ் மக்களே உங்களை காப்பாற்ற கடவுளும் வர மாட்டார். அவங்களும் விடமாட்டாங்கள்.

நன்றி போட்டுவாறன்
சவாரி தம்பர்


TUTORING
Math / Science / English
Over 10 years of Experience (M.Sc., Mathematics)
University Math:
.CALCULUS 1,2 &3
.LINEAR ALGEBRA
Universtiy courses for:
York,Ryerson,UOFT,UOIT,
Waterloo and Mcmaster
*Grade 9:MPM-1D *Grade 10:MPM-2D
*Grade 11:MCR-3U(Functions)
*Grade 12:MHF-4U(Advanced Functions)
*Grade 12:MCV-4U(Calculus and Vectors)
GR.9/10:Science(SNC1D)/SNC2D
GR.11/12:Physics(SPH3U)/SPH4U
Chemistry(SCH3U)/SCH4U
University Courses:Calculus 1,2 &3 and Linear Algebra
* Learn from a person who holds masters degree in Mathematics(M.Sc,Maths)
* Limited students per session
Call today to find out more!
Δ Grade 1-8: Math/Science/English
Δ Grade 9-12: Math/Science (Academic, applied, IB and AP)
Δ Principles of Mathematics. Δ Calculus. Δ Vectors.
Δ Functions. Δ Advanced Functions.
PARAM JYOTHI ACADEMY
Online/In-Class sessions
647.426.6329
www.paramJyothiacademy.ca


# கொஞ்சுமெழில் கவிதைகளால்...!

சிங்கள தீவினிற்கோர் பாலமமைப்போம்
சேதுவை மேடுறுத்தி வீதிசமைப்போம்
வங்கத்தில் ஓடிவரும் நீரின்மிகையால்
மையத்து நாடுகளில் பயிர்செய்குவோமென
தங்கத் தமிழெடுத்துப் பாடிய பாரதி
தரணியிலே எம்மோடின்று வாழ்ந்திருந்தால்
சிங்களத் தீவினிற்குப் பறந்து செல்வோம்
சிறுமதியார்கு விலங்கிடுவோமெனப் பாடியிருப்பான்!

நூற்றைம்பது ஆண்டுகளுக்கும் மேலாய்
நுனி விரலின்கீழ் பாரதத்தைக் கட்டிவைத்த
சோற்றை உண்ணா வேற்றுநாட்டானை
சொந்த நாட்டுக்கு ஓடவைத்த பெருமையில்
ஊற்றைப்போல் கவிதைகள் பாடிய பாரதிக்கும்
உயர்வானதொரு பங்குண்டே யார் மறுப்பார்?
காற்றைச் சுவாசிக்கத் தடைபோடலாகுமோ
கதிரொளியை கைகளினால் மறைத்திடல்கூடுமோ?

சுதந்திர வாழ்வுக்கு சாவு மணி அடித்த வெள்ளையரை
சுருட்டியெடுத்து தூக்கியெறிந்தவன் கவிபாரதி
விதந்தரு கோடி இன்னல்
விளைந்தெனையழித்திட்டாலும்
சுதந்திர தேவிநின்னை தொழுதிடல்
மறக்கிலேனேயென
இதமுடன் பாடிப்பணிந்த கவிபாரதி வாழ்வில்
இனிமைகண்டு வாழ்ந்தானா? இல்லையில்லை
நிதமொருதுன்பம் நிறைவான வறுமை
நீசரின் கொடுமையென வாழ்ந்து மறைந்தான்!


பாரத நாட்டின் வளங்களையெல்லாம் இரக்கமின்றி
படைபலத்தின் உதவியுடன் தடையறவே
சுரண்டியெடுத்து தம்நாடு சுபீட்சம்காண
சுதந்திரமாய் செயல்பட்ட கொள்ளையரை
விரட்டியடித்தே வீரசுதந்திரத்தின் பெருமைதனை
விஞ்சிநின்ற கவித்திறத்தால் பதிவுசெய்து
வரலாற்றில் உயர்ந்துநின்ற கவிபாரதி
வஞ்சியரும் நெஞ்சுறுதி கொள்ளவைத்தான்!



மகாகவி பாரதி பிறந்த தினம் 12.09.2020

வீரத்தியாகியருடன் கைகோர்த்து மக்களை
விழிக்கவைத்தான் விடுதலைக் கீதங்களால்
பாரதத் தாயின் அடிமைவிலங்குடைக்கப் பட்டதுயர்
பாரறியும் சீரழிந்து சிறைபுகுந்தும்
வேரறுத்து வெள்ளையனை வெளியேற்ற
வேண்டுமெனும் தாகத்தில் மோகம்வைத்தான்
கோரப்பிடியில் சிக்குண்ட பாரத தேசத்தை
கொஞ்சுமெழில் கவிதைகளால் மீட்டெடுத்தான்!

பெண்ணடிமை வாழ்வுக்கு விலங்கிட்டான்
பெருமையோடு அவர்சிறக்கச் சிறகிட்டான்
திண்ணமுடன் உயர்வு தாழ்வு நீக்கிவைத்தான்
தித்திக்கும் குயில்பாட்டும் பாடி வைத்தான்
பண்ணெடுத்துப் பாடுதற்கும் பாட்டுவைத்தான்
பாப்பாவுக்கும் பாடல்கள் பாடிவைத்தான்
மாண்டவனும் மண்ணைவிட்டு மறைந்தபோது
மகாகவிஞன் அவனுக்கோ வயது முப்பத்தொன்பதே!



கவிஞர் புரட்சிபாலன்
வன்கூவர்

# உங்களில்...

16ஆம் பக்கத்தொடர்ச்சி

அப்படிப்பட்டதொரு ஆனந்தம் அல்ல. நான் உங்கள் உள்ளத்தில் இருந்து மனிதர்கள் என்ற ரீதியில் எழும் ஆனந்தத்தைப் பற்றிப் பேசுகிறேன், மனிதனாக - உங்கள் உயிர் வாழ்வில் எங்கே உங்களால் சுட்டிக்காட்ட முடியுமோ எங்கே உங்களால் உங்கள் வாழ்வை அனுபவிக்க முடியுமோ அங்கு, உங்கள் வாழ்வில் என்ன நடைபெறுகின்றதென்பதைப் பொறுத்தல்ல.

இந்த இரண்டிற்குமிடையே உள்ள வித்தியாசத்தைக் கண்டீர்களா? நீங்கள் எங்கே உண்மையிலேயே உங்கள் வாழ்வையே அனுபவிக்க ஆரம்பிப்பது; இந்த வந்துபோய்க் கொண்டிருக்கும் சுவாசத்தை-நீங்கள் உயிருடன் இருப்பதை - உங்களுக்குக் பார்க்கக் கூடியதாக இருப்பதை, உங்களால் உணரக் கூடியதாக இருப்பதை, நீங்கள் எதை உணர்கிறீர்களோ அதையல்ல, ஆனால் உணர்வதை அனுபவிப்பது, யாரோ ஒருவரை நேசிப்பதல்ல, ஆனால் அந்த அன்பை அனுபவிப்பது. ஒரு பாடலைக் கேட்பதல்ல ஆனால் கேட்பதை அனுபவிப்பது. கேட்பதை அனுபவிப்பது. ஒரு குறிப்பிட்ட விடயத்தை அனுபவிப்பதைப் பற்றி நான் பேசவில்லை. நான் உயிருடன் இருப்பதை அனுபவிப்பதைப் பற்றிப் பேசுகிறேன்.

## வான்புகழ் வள்ளுவன்



உள்ளத் துணர்வுகளை ஓர்ந்தறிந்தே செந்தமிழில்
அள்ளியே தந்தார் அருமறையை - அள்ளிப்
பருகியே ஆனந்தம் கொள்வோரைப் பார்த்து
பெருமிதம் கொள்வோரின் பேறு.

மந்திர நூலாக மக்களிதை ஏற்றிட்டார்
தந்திரம் ஏதுமில்லைத் தத்துவங்கள் - சிந்துகின்ற
செந்நாப் புலவரின் சீரொளிர் சிந்தைகவர்
நந்நூல் இதனையே நம்பு.

வாழ வழிவகுத்த வள்ளுவனாம் தெய்வத்தை
ஆழமாய் எம்நெஞ்சில் அஞ்சலித்தே - சூழச்சீர்
நல்லறிவு தந்தாயே நாற்றிசையும் உன்புகழ்
சொல்லியே வாழ்த்தலாம்எம் சீர்.

வேதாந்தம் உள்வாங்கி வெற்றிகண்ட வேந்தனே
நாதாந்தம கண்டவனே நம்பெருமான் - மூதாதை
வாழ்முறையை முன்னின் றெடுத்தியம்பி வாழ்வதற்காம்
ஆழ்ந்த அறிவுதந்தாய் ஆம்.

ஏட்டிலே முப்பாலை எல்லோரும் கற்கவென
ஈட்டிக் குறளாய் எடுத்தியம்பி - தேட்டமாய்
வீட்டில் இருப்போர் விரும்பியே கற்கவென
நாட்டமே கொண்டிடுவர் நம்பு.

அறம்பொருள்இன் பஞ்சேரும் அருள்நெ றியுமாமே
ஆற்றலுயர் அறிவினாலே அகம்ம கிழ்வே
அறவழிதான் மேலோங்கும் ஆண்டாண் டாக
ஆதங்கம் வேண்டாமே ஆற்றல் சேர்க்கும்

துறவறம்போல் திறமைகொள்ளும் தூய வாழ்வைத்
தூசுதட்டி வாழ்ந்திருந்தால் துயர்தான் ஏது
மறம்வேண்டாம் மக்கள்ந யந்திட் டாலே
மதிப்புயர்வு மேலோங்கும் மாண்பு தானே.

முற்காலம் எழுந்ததிந்த முப்பால் நூலை
முதுபுலர் போற்றுகின்றார் முழுது முண்மை
வற்றாத அறிவுயர்நுண் வனப்புக் காக
வகைமூன்றாய்த் தந்தாரே வள்ளு வர்தான்

பற்றுடனே கற்றிடுவோம் பாதிப் பின்றிப்
பணிந்திடுவோம் எந்நாளும் பரம னைத்தான்
கற்பவரைக் கற்பிப்போர் கண்ட றிந்தால்
கனிவாகத் திருக்குறளைக் கற்பிப் பீரே.

பன்னாட்டார் மொழிபெயர்த்தார் பரம்பொருளின் ஈகையெனப்
படித்தறிந்த காரணத்தால் பதற்ற மின்றிப்
பன்னாளும் படிப்பதற்கே ஏற்ற வேதம்
பல்துறையும் சேர்ந்ததிந்தப் பனுவ லைத்தான்

கன்னலெனக் கற்பார்கள் கவலை தீரக்
கற்பனையங் கில்லையில்லை உண்மை உண்மை
இன்னலெலாம் போக்குமிந்நூல் இறைவன் தந்தான்
என்றுவப்பர் பல்லோரும் ஏற்றுத் தானே.

கண்கொள்ளாக் காட்சியங்கு கடற்கரை யோரமாய்க்
கன்யா குமரியிற்றான் கவின்சி லைகளாம்
விண்ணுயரும் வள்ளுவன்சேர் விவேகா னந்தர்
வள்ளுவர் கோட்டமுடன் வானு யர்ந்த

வண்ணச் சிலைகளை வடிவ மைத்த
வல்லமைசேர் சிற்பிகட்கு வாய்ப்ப ளித்த
தண்ணளிசேர் வள்ளுவத்தை தந்து நிற்கும்
தமிழ்நாட்டைச் செந்தமிழில் வாழ்த்து வோமே.

முருகேசு மயில்வாகனன்


பேட் சில்வர் காடின் முதியோர் இல்லம்
24 மணி நேர முதியோர் பராமரிப்பு சேவை

பயிற்றப்பட்ட பராமரிப்பாளர்களால் 24 மணி நேரமும் ஆதரவாகவும் சௌகரியமாகவும், மகிழ்ச்சியாகவும் கழித்திட நாடவேண்டிய ஒரே இடம்
416.613.1840 / 647.272.6993
birdsilvergardens@gmail.com
16 Birdsilvergardens, Scarborough ( Port Union & Island Road)


## தமிழருடன் கலந்த தங்கம்...!



தங்கத்தின் விலை நாளும் உயர்ந்து செல்வதைக் கண்டு வாழ்க்கையை எதிர் நோக்கிக் காத்திருக்கும் தமிழினச் சகோதரிகளுக்காக மனமுருகி எழுதப்பட்ட கவிதை

தங்கத்தின் விலையோ ஏறிப்போச்சு!
தமிழர்தம் மனமோ வாடிப் போச்சு
சங்குக் கழுத்துக்குச் சங்கிலியும்
சந்தனக் கைகளுக்கு வளையல்களும்
தொங்கத் தொங்கக் காதணியும்
தொல்லை தராத மூக்குத்தியும்
அங்கம் தன்னில் அணிந்து மகிழும்
அட்டியல் நெக்லஸ் தாலிக்கொடி!

தமிழர்தம் வாழ்வில் தங்கத்திற்கு
தனியானதொரு மதிப்புண்டு இன்னும்
வமிசவழியில் தொடர்ந்து எம்முடனே
வருகின்ற தங்கநகை ஏராளம்
பூமியில் வாழுங்கால் சேமித்து
புதிய சந்ததிக்காய் பாதுகாப்பார்
சேமித்த செல்வம் பல தலைமுறைக்குச்
சென்றடையு மெனஎண்ணி மகிழ்ந்திடுவார்!

மூதாதையர் வழி வந்த பொன்னகைகள்
மூச்சோடு கலந்து வந்த வந்த புன்னகைகள்
சேதாரமில்லாமல் பாதுகாத்து அவற்றை
சேர்ப்பார்கள் அடுத்து வரும் தலைமுறைக்கு
சாதாரண காரியமா இது என்றாலும்
சாதுரியமாய் இதனைச் செய்துமுடிப்பார்
ஏதாவது வில்லங்கம் நேர்ந்தாலும்
எளிதாக எதனையும் வென்று முடிப்பார்!

தங்கம் கண்டறிந்த பின்னால் மனிதன்
தலைநிமிர்ந்து வாழும் நிலை பெற்றான்
சிங்கத்தின் சிலிர்ப்புடன் உயர்ந்து நின்றான்
சிகரம் தொட்டான் சீரும் பெற்றான்
அங்கமெங்கும் தங்கத்தில் நகைகள் செய்து
அழகிற்கு மேலும் அழகு சேர்த்தான்
சங்கம் அமைத்துத் தமிழ் வளர்த்த தமிழன்
தங்கத்தை வாழ்வுடனே இணைத்தான் இங்கே!

தங்கம் விற்கின்ற விலையைக் காணின்
தலைச்சுற்றல் வருகிறது கண்கள் இருண்டு
மங்கலாகத் தெரிகிறது பார்வை
மயக்கமே வருகிறது தயக்கமின்றி
மங்கையர் தமக்கு கல்யாணம் காட்சி
மகிழ்வுதரும் சடங்குகள் சம்பிரதாயங்கள்
இங்கேயினி எப்படிச் செய்வோமெனும்
ஏக்கம்தானே நெஞ்சில் எழுகிறது!

தாலிக்கும் கொடிக்கும் தங்கம் வேணும்
தளிர்விரல்களுக்கோ மோதிரம் வேணும்
சிலுக்கும் மூக்கிற்கோ மூக்குத்தி வேணும்
சிவந்த கழுத்துக்கு சங்கிலி நெக்லஸ்
ஜொலிக்கக் கைகளில் வளையல்கள் வேணும்
ஜோராய் பெண்ணுக்கு இவையில்லையெனில்
கேலியும் செய்வார் மனம் நோகவும் செய்வார்
கேள்விக்குறியினி பெண்களின் வாழ்வு!



கவிஞர் புரட்சிபாலன்
வன்கூவர்

## நல்வாழ்வுக்கான ஏழு விடயங்கள்



1) மகிழ்ச்சியாக இருக்கப் பழகுங்கள்
2) பரிசுத்தமாகச் சிரிக்கக்கற்றுக் கொள்ளுங்கள்
3) பிறருக்கு உதவுங்கள்
4) யாரையும் வெறுக்காதீர்கள்
5) சுறுசுறுப்பாக இருங்கள்
6) தினமும் உற்சாகமாக வரவேற்கத்தயாராகுங்கள்
7) மகிழ்ச்சியாக இருக்க முயற்சியை மேற்கொள்ளுங்கள்

### நம்மை உயர்த்தும் ஏழு விடயங்கள்

1) ஏழ்மையிலும் நேர்மை 2) கோபத்திலும் பொறுமை 3) தோல்வியிலும் விடாமுயற்சி
4) வறுமையிலும் உதவிசெய்யும் மனம் 5) துன்பத்திலும் துணிவு
6) செல்வத்திலும் எளிமை 7) பதவியிலும் பணிவு

# MORTGAGE SOLUTIONS

## SAVE UPTO 75% REFINANCE

## MONTHLY SAVING $2,409

| | | Before | After |
|---|---|---|---|
| Mortgage Payment | $320,000 @ 2.90% | $1,498.02 | - |
| Auto Loan | $21,000 @ 7.50% | $764.25 | $0.00 |
| Line of Credit - 1 | $16,000 @ 6.50% | $566.67 | $0.00 |
| Line of Credit -2 | $12,500 @ 7.00% | $447.92 | $0.00 |
| Credit Card -1 | $ 8,800 @12.00% | $352.00 | $0.00 |
| Credit Card - 2 | $ 5,200 @ 19.00% | $238.34 | $0.00 |
| Store Card | $ 3,000 @ 24.00% | $150.00 | $0.00 |
| New Mortgage | $386,500 @ 2.9% | | $1,605.00 |
| Total Debt | | $ 386,500.00 | $ 386,500.00 |
| Total Payment | | $4,014.20 | $1,524.55 |



**KIRUBA THANABALASINGHAM**

Mortgage Agent Lic# M12002440

info@mortgagesolutions.ca

www.MortgageSolutions.ca

Ultimate Mortgage and Finance Solutions Inc. Lic#11995

## Prime + 1% Lower Rate

## $50,000 EQUITY LOAN

## GET APPROVED WITHIN 24 HOURS


# 416.298.2777

# $375 Mo.

# MARKHAM & STEELES - BLUE BUILDING

B105 - 3341 Markham Road, Toronto, ON M1X 0A5



BUYING OR SELLING
Indra Michael Xavier
Sales Representative
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
905-201-9977
*INDEPENDENTLY OWNED AND OPERATED


we always care at . . .
Bridletowne Dental
Dr. Jeyapalan. BDS., DDS.
Dentist
416 492 3775
Bridletowne Dental
2555 Warden Avenue. Scarborough M1W 2H5
( close to Warden and Finch , in the TD BANK PLAZA)


வீடு வாங்க,விற்க,வாடகைக்கு பெற்றிட...
வைத்திய பரிசோதனையற்ற காப்புறுதிக்கும்...
Vany Jeganmohan
Realtor/Financial Advisor
416.670.7436
✓ Buy/Sell/ Lease
✓ Life Insurance
✓ Super Visa
✓ Non Medical
✓ RESP
VJS Financial Services
We ease your cost of living



PLUS YOU
DRIVING SCHOOL
CERTIFIED ROAD SAFETY INSTRUCTOR
NOW HIRING
DRIVING INSTRUCTORS
Training will be provided
For more Info:
Balan 416.999.7727


வீடு வாடகைக்கு...
வாங்க...
விற்க...
Vasanta Raviendren
Cell: 416-716-1540
Life Insurance
Non Medical
Super Visa
RESP
Mega Financial Group
HomeLife/GTA Realty Inc. Brokerage*
5215 Finch Ave East. Unit 203 Toronto ON M1S 0C2


IT'S YOUR MOVE...
Let me help you make the right one.
Century 21
Titans Realty Inc.,
Brokerage.
Sudharshan
Muthucumaraswamy
Broker
Direct: 416.567.6209
Residential / Commercial / Purchase / Sale / Investment / Leasing


வீடு வாங்க, விற்க நட்பான சேவை
Ponnambalam Mahalingam
Sales Representative
Dir: 416.729.0955
arunponmahal@gmail.com
HomeLife/ Future Realty Inc. Brokerage*
7 Eastvale Dr., Suite 205 Markham ON L3S 4N8 Bus: 905.201.9977
வருமான வரி சேவை Income Tax e-File
416.288.1548 / 416.729.0955


Coaching • Yoga • Meditation • Healing • Astro Guidance
S&S EVOLVE
Varany Sivathasan
Life Coach • Healer
Yoga & Meditation Instructor
416.875.0553
info@ssevolve.com
Unit 8, 151 Nashdene Court, Scarborough,ON M1V 2T3


ATSEY
FINANCIAL GROUP LTD
MORTGAGE STRESS?
WORK WITH ALL MAJOR LENDERS
2nd and private financing available.
Call 416.333.9393
MORTGAGE ALLIANCE
PURCHASE • REFINANCE • INVESTMENT PROPERTIES


ROYAL MEDICAL AND
PROFESSIONAL CENTRE
2225 Markham Road, Scarborough
UNITS AVAILABLE FOR SALE
Amalraj Joseph
Sales Representative
416.300.8294
amalraj.joseph@gmail.com
HomeLife/GTA Realty Inc. Brokerage*


B.J ரெய்லரிங் அன் ஜுவலரி
TAILORING & JEWELLERY CLASSES
We provide training in
Jewellery making and Tailoring
தையல் பயிற்சி மற்றும் ஜுவலரி செய்யும் முறைகள்
கற்றுக் கொடுக்கப்படும்
தொடர்புகளுக்கு: 416-720-4472
email: jegathees2007@gmail.com


HOMES & CONDOS FOR SALE
Brock/Rossland - Whitby
For sale
Gas Station
York St/Bremner St - Toronto
$699,900
Condo Apt - 2BR/1WR
Cambray Rd/North St - Kawartha
$369,900
Bungalow -2BR/1WR
1st & 2nd mortgage availabe upto 1Million
Specialized in New Condos & Cottages
A.ANTON JEEVA,FRI
Broker
Dir: 416.575.5055
anton.jeeva@gmail.com
www.getanton.com
RE/MAX
ROYAL PROPERTIES INC
Phone: (416) 321-0110


www.tamilvanakkam.com
Tamil
VANAKKAM
தமிழ் வணக்கம்
உலகத் தமிழர்களின் இணைப்புப் பாலம்